# விடுதலைப்புலிகள்

குரல்: 28 | மாசி 1992 | அன்பளிப்பு: ரூபா 7-50


# இராணுவத்தைத் திணறடிக்கும் புலிகளின் புதிய போருபாயம்


## தமிழீழமெங்கும் மின்னல்வேக அதிரடிகள்

கடந்த மூன்றரை மாத காலமாக, நாங்கள் புதிய போர் உபாயம் ஒன்றை வரைந்து, அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

இப்போருபாயம் சிங்கள இராணுவ இயந்திரத்திற்குப் பெரிய தலையிடியாக மாறிவிட்டதுடன், அதனுடைய போர்முறைத் திட்டத்தையும் [Strategy] ஈடாட்டம் காணச் செய்துவிட்டது.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலைக்கேற்றவாறு இப்போருபாயத்தைத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தயாரித்து, நடைமுறை உருவமுங் கொடுத்துள்ளார்.

இப் புதிய போருபாயம் நடைமுறையில் பெரு வெற்றியைச் சந்தித்து வருவதால், சிறீலங்கா இராணுவத் தலைமைப் பீடம் திட்டமிட்டபடி தமது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதவாறு, சிக்கலில் மாட்டியுள்ளது.



யாழ். குடாநாட்டை முழுமையாகவே கைப்பற்றும் எண்ணத்துடன், கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக சிங்கள இராணுவம் தன்னைத் தயார்ப்படுத்தத் தொடங்கி விட்டது.

இந்த இராணுவநோக்கத்தை நிறைவு செய்வதற்காக சிறீலங்கா இராணுவத் தலைமைப் பீடம், ஒரு போர்முறைத் திட்டத்தை வகுத்தது. அதன்படி முப்படைகளையும் ஒருங்கே திரட்டி — மரபுவழிப்போர்முறை மூலம் — பாரிய தாக்குதலை நடாத்தி யாழ். குடாநாட்டை விழுங்கிவிடத் திட்டமிட்டிருந்தது.

சிறீலங்கா அரசின் இந்த இராணுவநோக்கத்தைச் சீர்குலைக்கும் எண்ணத்துடன், நாம் புதியதொரு போருபாயத்தைத் தயாரித்தோம்.

அதன்படி, சிங்கள ஆயுதப் படைகள் யாழ். குடாநாட்டின் மீதான தமது இராணுவ நடவடிக்கையைத்தொடங்குமுன்னர், ஆயுதப்படையினர் மீது பரவலானதாக்குதல்களைத் தமிழீழமெங்கும் நடாத்தத். திட்டமிட்டோம்.

கடலிலும், தரையிலும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினோம்.

படையினரின் கால் நடை ரோந்துகளும் தாக்கப்பட்டன.

வாகன ரோந்துகளும் தாக்கப்பட்டன. காவல் அரண்களும் தகர்க்கப்பட்டன. கடலிலும் போர்ப் படகுகள் தகர்க்கப்பட்டன.

பல்வேறு முனைகளிலும் மாறிமாறி மின்னல்வேக அதிரடித் தாக்குதல்கள் தொடர்ந்தன.

சற்றும் எதிர்பாராத திடீர்த் தாக்குதல்களைக்கொண்ட இப் போருபாயமானது, சிங்களப் படையினருக்குப் பேரிழப்பை ஏற்படுத்தி, அவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இதன்காரணமாக படையினரின் மனவுறுதி சிதைவடைந்ததுடன், சிறீலங்கா இராணுவம் தயாரித்துவைத்திருந்த போர்முறைத் திட்டத்தையும் ஈடாட்டம் காணச் செய்துவிட்டது.

கடந்தநொவம்பரிலிருந்து இம் மாத நடுப்பகுதி வரையுள்ள மூன்றரை மாத காலப்பகுதியிலும், 30இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை வெற்றிகரமாக நடாத்தியுள்ளோம்.

இதில் 400இற்கும் மேற்பட்ட சிங்கள ஆயுதப்படையினரைக் கொன்று, 209 நவீன ஆயுதங்களையும் பல்லாயிரக்கணக்கான ரவைகளையும் கைப்பற்றியுள்ளோம்.

சிங்கள அரசின் போர் முறைத்திட்டத்தைச் சீர்குலைப்பதற்காக நாம் மேற்கொண்ட தாக்குதல்களில் 100 போராளிகள் வீரச்சாவைச் சந்தித்துள்ளனர்.

அத்துடன், யாழ். குடாநாட்டு மக்கள்மீது சிஙகள அரசு போர் மிரட்டலைத் தொடர்ச்சியாக விடுத்துவந்தும் கூட, மக்கள் போருக்கு முகங்கொடுக்கத் தங்களைத் தயார்ப்படுத்தியே வந்துள்ளார்கள். இது, சிங்கள அரசை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இருந்தபொழுதிலும், இப்போதும்கூட குடாநாட்டின் மீதான படையெடுப்பு அபாயம் முற்றாக நீங்கிவிடவில்லை. அப்படியானதொரு முயற்சியை எதிரி எடுத்தால் தகுந்த பதிலடி கொடுக்கத் தயாராக இருப்போம்.

## புலிகளின் குரல்

# தமிழர் தேசிய பிரச்சினையும் சிங்களப் பேரினவாதமும்

சமாதான வழிமூலம் தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிகளுக்கு பெரியதொரு முட்டுக் கட்டையாக எழுந்துநிற்கிறது. சிங்களப் பேரினவாதம். சமீபத்தில் அமைச்சர் தொண்டமான் மேற்கொண்ட சமாதான முயற்சிக்கும் சிங்களப் பேரினவாதம் ஆப்பு வைத்துவிட்டது. இது ஒரு புதிதான வரலாற்று நிகழ்வு அல்ல. தமிழரின் அரசியல் வரலாற்றில், காலத்திற்குக் காலம், சமரசத் தீர்வுக்கான எத்தனிப்புக்கள் எடுக்கப் பட்டபோதெல்லாம் பேரினவாதம் தலைதூக்கி அவற்றிற்குத் தடையாக அமைந்தது.

தமிழரின் தேசிய பிரச்சினைக்கு மூலகாரணியாகவும், அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முட்டுக்கட்டையாகவும் இருந்துவருவது சிங்களப் பேரினவாதமாகும்.

பேரினவாதத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் நீண்டதொரு வரலாறு உண்டு. எனினும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் இலங்கையிலிருந்து வெளியேறியதையடுத்து, சிங்கள ஆளும் வர்க்கத்திடம் ஆட்சியதிகாரம் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து பேரினவாதம் தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறை வடிவங்களாக வெளிப்பாடு கண்டது. இந்தப் பேரினவாத ஒடுக்குமுறை காலக்கிரமத்தில் தமிழரின் தேசிய தனித்துவத்தைச் சிதைக்கும் அளவிற்கு பேயுருவம் பெற்றது. இந்த ஒடுக்குமுறையின் அழுத்தங்களும், நிர்ப்பந்தங்களும் தமிழரிடையே தேசியவாத எழுச்சியையும் சுதந்திர இயக்கத்தையும் வளர்ச்சிபெறச் செய்தது. தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தை வலுப்பெறச் செய்தது.

நாற்பது ஆண்டுகால இந்தப் போராட்ட வரலாற்றில், காலத்திற்குக்காலம், அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒப்பந்தங்கள் உடன்பாடுகள் செய்யப்பட்டன. இந்தச் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதெல்லாம் தென்னிலங்கையில் இனவாதப்பேய் தலைவிரித்தாடியது. இனத்துவேசம் வெறியாட்டம் ஆடியது. இதனால் சமாதானத்தின் கதவுகள் அடைக்கப்பட்டன. தமிழருக்கு நீதி மறுக்கப்பட்டது.

அமைச்சர் தொண்டமானின் சமாதான முயற்சிக்கும் இதே கதிதான் நடந்திருக்கிறது. தமிழ் மக்களுக்கு பிரதேச ரீதியான சுயாட்சியாவது வழங்கப்பட வேண்டுமென தொண்டமான் விரும்பினார். இந்த நோக்கைக் கொண்ட அவரது தீர்வுத் திட்டம் தமிழரின் வரலாற்றுப் பிரதேசத்தை, அதாவது தமிழரின் தாயகத்தை அங்கீகரித்தது. தமிழ் மக்களின் அடிப்படையான கோரிக்கை ஒன்றை தொண்டமானின் திட்டம் தொட்டு நிற்பதைக் கண்டதும் சிங்களப் பேரினவாதம் சினங்கொண்டு எழுந்தது. இந்த இனவாத சூறாவளியில் சிக்கி தொண்டமானின் சமாதானப் படகு மூழ்கியது.

அன்றொரு காலம் சித்தாந்த விஷமாக பௌத்த வேதாகமங்களில் புகுந்துகொண்ட பேரினவாதம் இன்று சிங்கள மக்களது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வேரூன்றி வியாபித்து நிற்கிறது. பண்பாட்டுக் கோலங்களில் ஊடுருவி நிற்கிறது. மதம், கல்வி, அரசியல் என்றுரீதியில் நிறுவனமயம் பெற்றிருக்கிறது. சிங்கள தேசத்து சமூக, அரசியல் வாழ்வை ஆட்டிப்படைக்கும் சக்தியாக பூதாகர வடிவம் எடுத்திருக்கிறது.

சிங்களப் பேரினவாதத்தின் இந்தப் பிரமாண்டமான வளர்ச்சியும், எழுச்சியும், சிங்கள மக்களின் சமூக எண்ணவியக்கத்தில் அது புரியும் ஆதிக்கமும், எமக்கு ஒரு எதார்த்தபூர்வமான அரசியல் உண்மையைப் பகர்கிறது. அதாவது, பகை முரண்பாட்டின் கோரமான வடிவமாக இந்த இனவாதம் இயங்கி வரும்போது சிநேகபூர்வமாக சமாதான வழியில், நீதியான, நியாயமான அரசியல் தீர்வு காண்பது இலகுவான காரியமாக இராது. எமது கண்முன்னே நிதர்சனமாக, அப்பட்டமாகத் தெரியும் ஒரு பேருண்மையை நாம் நிராகரித்துவிட முடியாது.

சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து நாம் எமது உரிமைகளைக் கேட்டுப்பெற முடியாது. சமாதான மேசையிலிருந்து பேசிப் பெற முடியாது. சமத்துவத்தினதும், தர்மத்தினதும், நீதியினதும் அறநெறிப் பண்புகளை இனவாதம் ஒரு பொழுதும் புரிந்துகொள்ளப்போவதில்லை.

நாம் எமது உரிமைகளைப் போராடித்தான் வென்றெடுக்க வேண்டும். சிங்கள இனவாத அரசியல் எமக்குச் சதா புகட்டிவரும் பாடமும் இது தான்.

## புதைந்த நீங்கள் மீண்டும் எழுவீர்

கல்லறைக்குள்
தூங்கும் எம் வீரர்களே
விழியில் எதிரியைத் தேடி
களத்துள் புகுந்தீர்கள்;
எதிரியின் காவலரணை
எரித்தீர்கள்;
வீறுடன் எதிரியின்
துப்பாக்கியை எடுத்தீர்,
வென்றீர்.
வென்றவர் நீங்கள்
எமது பாசறைக்கு
மீண்டும் வரவில்லை;
நீங்கள் மீட்ட மண்ணில்
விதையாய்ப் புதைந்தீர்.
புதைந்த நீங்கள்
மீண்டும் எழுந்து
எமது மண்ணில்
பிறந்து புதிய
புலியாய்,
மீண்டும் மீண்டும்
விழ விழ எழுவீர்கள்—
எமது மண்ணில்! ❋

## புரட்சிப் பெண்ணாக எழு!

அடுப்பங் கரையில்
உறைந்து கிடக்கும்
பெண்ணினமே,
அடுப்புப் புகையில்
உன் கண்
இருளைத்தான் பார்க்கும்.
ஆனால்
இருண்டு கிடக்கும்
பெண்ணினத்தைப் பார்க்க—
அகப்பை பிடித்து
அம்மியில் அரைத்தது போதும்.
விடியும் வேளை இது...
விடியலுக்காக
எழுந்து வா!
உனக்காக விடிவு
காத்திருக்காது;
காலமும் பொறுத்திருக்காது.
துப்பாக்கியை எடு!
துள்ளிச் சென்று
நீயும் ஒரு,
புரட்சிப் பெண்ணாக மாறு! ❋

பூங்குன்றனின் (நிசாம்) கவிதைகள்.

## உளவாளிகள்

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1987 ஆம் ஆண்டுக்காலகட்டத்தில் கிளிநொச்சியில் வேலை பார்த்தபோது, கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்த-முன்னர் இவருக்குத் தெரிந்த-ஒரு சிங்கள இராணுவச் சிப்பாயுடன் தொடர்பு கொண்டதன் பயனாக, இவர் தகவல்களை வழங்கத் தொடங்கினார்.

அண்மையில், இவரது தொடர்பாளரான இராணுவச்சிப்பாய்ஊடாக கொழும்பு கூட்டுப்படைத்தலைமையகத்துக்கு தகவல்களை அனுப்பிக் கொண்டிருந்த போது, கைது செய்யப்பட்டார்.

இவர், ஒரு முக்கிய உளவாளியாகும்.

ஆனையிறவு முகாமை நாம் தாக்கத் திட்டமிட்டு, அதற்குரிய வேலைகளைச் செய்துகொண்டிருந்த போது, ஆனையிறவு முகாமின் பரந்தன் பக்கமாகவுள்ள பகுதிகளிலான எமது செயற்பாடுகளை, உடனுக்குடன் கூட்டுப் படைத் தலைமையகத்திற்கு இவர் அனுப்பியிருந்தார் அத்துடன் ஏனைய உளவாளிகள் மூலம் கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகத்துக்குக் கிடைக்கும் தகவல்களை, வரைபடங்களை, இவர் உறுதிப்படுத்தியும் கொடுப்பார்.

இதற்குச் சன்மானமாக கூட்டுப் படைத் தலைமையகம் இவருக்கு, இருபத்தையாயிரம் ரூபா பணம் வழங்கியுள்ளது. அத்துடன், 1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கிளிநொச்சி இராணுவத்தினர் பொதுமக்களிடமிருந்து பறிமுதல் செய்த பொருட்களில் சிலவற்றை. இவருக்குச் சன்மானமாகக்கொடுத்துள்ளனர். அத்தகைய பொருட்களில் உழவு இயந்திரமொன்றும் அடங்கும்.

இவ்விதமாக உதவியின் பின்னாலும், உறவுமுறையின் பின்னாலும், பழைய தொடர்புகளின் பின்னாலும் உளவாளிகள் உருவாக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் பணத்தை இலக்காகவைத்தே உளவாளிகளாக மாறி, எதிரிக்குத் தகவல்களை வழங்கித் தேசத்துரோகம் புரிந்துள்ளனர்.

இவ்விதமாக, எமது மக்களின் எதிரியான சிறீலங்கா அரசு வைத்த பொறிகளில் சிக்கி சிலர் துரோகிகளாகவும், உளவாளிகளாகவும், தகவல் கொடுப்போராகவும் மாறியுள்ளனர். இவர்கள் பணத்துக்காகவோ, சுயநலனுக்காகவோ செய்யும் துரோகம் எங்களது விடுதலைப் போராட்டத்தைப் பெரிதும் பாதித்துள்ளது.

எண்ணற்ற மக்களின் சாவுக்கும் துன்பத்திற்கும் இது காரணமாகியுள்ளது. இந்த விளக்கங்களையும் விபரங்களையும் மக்கள்முன் வைப்பதற்குக் காரணம், எதிரியின் இப்பொறிகளுக்குள் எமது மக்கள் சிக்கிவிடக் கூடாது என்பதற்கேயாகும். ❋

# தனியார் கல்வி நிறுவனங்களும் பாடசாலைகளும்

**இதுவரை நாளும் இருந்தது போலல்லாது, தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்கத்தில் — சமூக நோக்குடன் சில வரையறைகளைச் செய்துள்ளோம்.**

**இவ் வரையறைகளானது தனியார் கல்வி நிறுவனங்களை மூடிவிடும் நோக்கம் கொண்டதல்ல.**

**மாறாக, பாடசாலைக் கல்வியை மேலும் அபிவிருத்தி செய்து தமிழீழ மாணவர்கள் அனைவரும் இலவசக்கல்வியை சம வாய்ப்புடன் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்.**

**இக் கட்டுரை, தனியார் கல்வி நிறுவனங்கள் மீது நாம் மேற்கொண்டுள்ள வரையறைகள் தொடர்பான கருத்துக்களை மேலோட்டமாக விளக்குகின்றது.**

வாரம் முழுவதும் இயங்கிவந்த தனியார் கல்வி நிறுவனங்கள் இப்பொழுது திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று பாடசாலை நாட்களிலும் இயங்காது விடும்படி கேட்கப்பட்டுள்ளன.

அத்துடன் செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் காலைநேர வகுப்புக்களையும் நடாத்தாது விடும்படியும் கேட்டுள்ளோம்

ஆனால் சனி, ஞாயிறு முழுநாளும் தனியார் கல்வி நிலையங்கள் இயங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், செவ்வாய் வியாழன் ஆகிய நாட்களிலும் மாலை 3.00 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை தனியார் கல்விநிலையங்கள் இயங்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

இவைகள் தவிர,

தனியார் கல்விநிறுவனத்தினர் நடாத்தும் ஒவ்வொரு வகுப்பிலும் எத்தனை எத்தனை மாணவர்கள் படிக்கலாம் என்பது பற்றியும், ஒவ்வொரு மாணவரிடமும் எவ்வளவு எவ்வளவு பணம் அறவிடலாம் என்பது போன்ற விடயங்கள்பற்றியும், தனியார் கல்வி ஒன்றியத்தினரே கூடி முடிவெடுத்துக் கொள்ளலாம் என்றும், கூறப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்கள்மீதான எமது புதிய அணுகுமுறை, சிலர் சந்தேகிப்பது போல அவற்றை மூடிவிடும் எண்ணங் கொண்டதல்ல.

உண்மையில், எமது நோக்கமானது பாடசாலைக் கல்வியை அபிவிருத்தி செய்வதுதான். அதன்மூலம் அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வியைக் கிடைக்கச் செய்வதுடன், மாணவர்கள் மத்தியில் கல்விச் சமத்துவத்தைப் பேணி சமூகப்பற்றை வளர்ப்பது தான்.

ஒரு காலத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மேலதிகக் கற்பித்தல் தேவைப்பட்ட ஒரு சிலபாடங்களுக்குப், பாடசாலையில் கல்விபயிலும் கலக்கெடு முடிவடைந்தும் கல்வியை முடிக்கவியலாத மாணவர்களுக்குமென, முழுநேரம் செயற்படத் தொடங்கிய தனியார் கல்வி நிறுவனங்கள், காலகதியில் முழுநேரக் கல்வி நிறுவனங்களாக மாறிவிட்டன.

இம்மாற்றமானது, கல்வி வாய்ப்புச் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன், மாணவர்களை இயந்திரமாக்கவும் முனைந்தது. ஒட்டுமொத்தத்தில் ஒரு சமூகப் பாதிப்பை ஏற்படுத்த முனைந்தது.

தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிப்பவர்களில் மிகப் பெரும்பாலானோர் பாடசாலை ஆசிரியர்களாவர்.

யாழ் குடாநாட்டில் சுமார் 7,000 பாடசாலை ஆசிரியர்கள் உள்ளனர். இவர்களில் 1,100 ஆசிரியர்கள் பாடசாலையில் சேவையாற்றியபடி தனியார் கல்வி நிறுவனங்களிலும் கற்பிக்கின்றனர். சுருக்கமாகச்சொன்னால் ஏழு ஆசிரியர்களுக்கு ஒருவர் (7 : 1) தனியார் கல்வி நிறுவனத்திலும் கற்பிக்கின்றார்.

கற்பித்தலுக்கென மாணவர்களிடமிருந்து தனியார் கல்வி நிறுவனங்கள் வசூலிக்கும் பணத்தில், இவ்வாசிரியர்களும் பெருந்தொகைப் பணத்தைச் சம்பளமாகப் பெற்றுவந்தனர் இது பாடசாலையில் அவர்களுக்கு இருந்த பிடியைத் தளர்த்தியது.

இதனால், பாடசாலைகள் மதிப்பிழந்தன இதைச் சீர்திருத்த பாடசாலை நிர்வாகமும், கல்விக்கான உயர் பீடமும அக்கறையெடுக்கவில்லை.

கணிசமான ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு ஒழுங்காக வராது விட்டனர்.

வந்தாலும், மாலை நேர தனியார் கல்வி நிறுவனக் கற்பித்தலுக்காகத் தங்களைத் தயார்ப்படுத்துவதற்கு, பாடசாலை நேரத்தை எடுத்துக் கொண்டனர்.

காலைநேரம் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பித்துவிட்டு பாடசாலைகளுக்கு வருவதால், பாடசாலையில் களைத்துப்போய் இருக்கின்றனர்.

இதனால், பாடத் திட்டங்களைப் பல ஆசிரியர்கள் முழுமையாகக் கற்பித்து முடிப்பதில்லை. தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை இழுக்க வேண்டும் என்ற நோக்கிலும், சில ஆசிரியர்கள் பாடத் திட்டங்களை முடிப்பதில்லை. ஆனால் இதே ஆசிரியர்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் பாடத் திட்டங்களை சரியாகக் கற்பித்து முடிப்பர்.

இந்த நிகழ்வானது, பாடசாலையை விட தனியார் கல்வி நிலையங்களே சிறந்தது என மாணவர்களையும் பெற்றோர்களையும் எண்ண வைத்துவிட்டது.

பாடத்திட்டங்களைக் கற்பித்து முடிக்காத ஆசிரியர்களது தவறுகளை பாடசாலை நிர்வாகமும் தட்டிக்கேட்பதில்லை, மக்களும் பொருட்படுத்துவதில்லை. இதனால் இக்குறைபாடு மற்றைய பல ஆசிரியர்களையும் பற்றிப்பிடித்த பாடசாலைகளது, ஒட்டுமொத்தமான குறைபாடாக அது இன்று மாறிவிட்டது

இக்காரணங்களால் மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து அந்நியப்பட்டு நிற்கின்றார்கள். கணிசமான மாணவர்களும் பாடசாலைகளுக்கு ஒழுங்காக வராது விடுகின்றார்கள் பாடசாலை நேரங்களிலும் தனியார்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்கின்றார்கள்.

இதே சமயம் பெரும்பாலான மாணவர்கள் பணவசதி இன்மை காரணமாக, இக் கல்விப் போட்டிக்கு ஈடுகொடுக்கமுடியாது திணறுகின்றார்கள் தனியார் கல்விநிறுவனங்களின் ஆதிக்கத்தால் ஏற்பட்ட கல்விப்போட்டியில் தங்களது பிள்ளைகளையும் ஈடுபடுத்த முடியவில்லையே என மிகப் பெரும்பாலான பெற்றோர்கள் ஏங்குகின்றார்கள். அந்த மாணவர்களும் வேதனைத் தீயில் வெந்து வாடுகின்றார்கள். இதனால் பணவசதி படைத்தோர் மட்டுந்தான் கல்வியில் முன்னணி வகிக்கலாம் என்ற சமூகப் பாரபட்சம், மீண்டும் தலை தூக்கப் பார்க்கின்றது.

இன்று ஒரு குடும்பத்திலிருந்து சாதாரணமாக,இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட பிள்ளைகள் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றார்கள். இதனால் கணிசமான தொகைப்பணத்தை மாதாந்தம் அப் பெற்றோர் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியுள்ளது. பணவசதி படைத்த சிலர் அதை எளிதாகச் செலுத்தி விடுவர்.

அத்துடன் ஆசிரியர்கள் நீதியான முறையில் பாடசாலைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படுவதில்லை. ஆசிரியர்களின் நியமனங்களிலும் இடமாற்றங்களிலும் சுயநலன்கள் மலிந்துள்ளன. ஆசிரியர்களின் தரத்தை உயர்த்துவதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. பல சந்தர்ப்பங்களில் கல்விக்கான / பாடசாலைக்கான நிர்வாகமே குறுகிய வட்டத்திற்குள் நின்று இம் முறைகேடுகளைச் செய்துள்ளது

இப்படியாக பாடசாலைக் கல்விக்கான நிர்வாகமும் பாடசாலைகளது முக்கியத்துவத்தையும், தேவைகளையும், அவசியத்தையும் சீரழித்தது.

ஒரு காலத்தில் பணம் படைத்தவர்களது கையில் ஏகபோகமாகவிருந்த கல்வி, பாடசாலைகள் பரவலாக்கப்பட்டு அதன் மூலம் இலவசக் கல்வி என்று வந்தபின்னர் தான் அனைத்து மாணவர்களும் கல்வியைப்பெற்றனர் என்பதை, எவரும் மறுக்க முடியாது.

அவ் இலவசக் கல்வியின் நோக்கம், பயன்பாடு என்பன தனியார் கல்வி நிறுவனங்களின் எழுச்சியால்-- ஆதிக்கத்தால் திசைமாறி விட்டது.

ஆனால் சாதாரண வாழ்க்கை வாழும் பெற்றோர்கள், தமதுவாயைக்கட்டி வயிற்றைக்கட்டி துன்பப்பழுக்களை மேலும் மேலும் தாங்கியே, தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பணத்தைச் செலுத்துகின்றனர்.

ஆனால் இதே மாணவர்களுக்கு கல்வி போதிப்பதற்காக, பாடசாலை ஆசிரியர்களுக்கென மாதாந்தம் பல கோடி ரூபா பணம் செலுத்தப்படுகின்றது. அந்தப் பணத்தைச் சம்பளமாகப் பெறும் ஆசிரியர்களை ஒருவழிப்படுத்தி பாடசாலைகளை சீராக இயங்க வைத்தால் இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்,

ஆகவே என்னதான் குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் கூட - பாடசாலைகள் வகிக்கும் சமூகப்பாத்திரத்தை தனியார்கல்வி நிறுவனங்கள் வகிக்கமுடியாது.

பாடசாலைக்கல்விதான் தமிழீழ இளம் பரம்பரைக்கு சமூகவிழிப்புணர்வையும், சமூகப்பற்றையும் வழங்கும்.

பாடசாலைகள் அவை அமைந்திருக்கும் பகுதி மக்களின் பொதுச் சொத்தாகும். தமது பிள்ளைகளுக்கு எதிர்கால ஒளியைக் காட்டும் அப் பொதுச் சொத்து மீது பற்று வைத்து, அதை வளர்க்க மக்கள் தம்மையே அர்ப்பணிப்பர். அதன் சுக - துக்கங்களில் உண்மையான ஈடுபாடுகொள்வர். இதனால் அப் பாடசாலையை மையமாக வைத்து ஒரு சமூக உணர்வு வளரும். அந்தச் சமூக உணர்வானது அங்கு கல்வி பயிலும் மாணவர்களையும் பற்றிப் பிடிக்கும் சகோதரத்துவம் -- சமத்துவம் போன்ற மனித விழுமியங்களுடன் மாணவர்கள் வளர்க்கப்படுவர். இந்த உணர்வுகளானது ஒட்டுமொத்த மக்கள் நலன் சார்ந்தது. எனவே பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது எமது தேசியக் கடமையாகும்.

அப்படியென்றால் தனியார் கல்வி நிறுவனங்கள் மீது வரையறைகளை விதிப்பதை விட்டுவிட்டு பாடசாலைகளை அபிவிருத்தி செய்யலாமே என்ற கேள்வி, சிலர் மனதில் எழலாம்.

வெறும் வாதத்தின் அடிப்படையில் பார்க்கும்போது அது சரிபோன்றே தோன்றும். ஆனால் நடைமுறையில் அது பயன்தராது.

சாதாரண உதாரணமொன்றைப் பார்ப்போம்:

பாடசாலைக் கல்விதான் தமிழீழ இளம் பரம்பரைக்கு சமூக விழிப்புணர்வையும், சமூகப் பற்றையும் வழங்கும்.

பாடசாலைகள் அவை அமைந்திருக்கும் பகுதி மக்களின் பொதுச்சொத்தாகும். தமது பிள்ளைகளுக்கு எதிர்கால ஒளியைக்காட்டும் அப் பொதுச் சொத்துமீது பற்று வைத்து, அதை வளர்க்க மக்கள் தம்மையே அர்ப்பணிப்பர். அதன் சுக - துக்கங்களில் உண்மையான ஈடுபாடுகொள்வர். இதனால் அப்பாடசாலையை -- மையமாக வைத்து ஒரு சமூக உணர்வு வளரும். அந்தச் சமூக உணர்வானது அங்கு கல்வி பயிலும் மாணவர்களையும் பற்றிப் பிடிக்கும். சகோதரத்துவம் -- சமத்துவம் போன்ற மானிட விழுமியங்களுடன் மாணவர்கள் வளர்க்கப்படுவர். இந்த உணர்வுகளானது ஒட்டுமொத்த மக்கள் நலன் சார்ந்தது எனவே பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது எமது தேசியக் கடமையாகும்.

சாதியானது சமூகமனதிலுள்ள ஒரு துஷ்டப் பிசாசு. இது ஒழிக்கப்படவேண்டும். அப்போதுதான் சமூக ஒற்றுமை மேலோங்கி சமுதாயம் முன்னேறும்.

சாதி ஒழிப்புக்குச் சமூக விழிப்புணர்ச்சி தேவை சமூக விழிப்புணர்வுக்குப் பொருளாதார மேம்பாட்டுடன், புரட்சிகரக் கல்வியும் தேவை என்பது உண்மை.

ஆகவே பொருளாதார வாய்ப்புகள்ஏற்படுத்தப்பட்டு, புரட்சிகரக் கல்வியும் போதிக்கப்பட்டு, அவை மக்களிடம் பூரணமாகச் சென்றடையும் வரை நாம் காத்திருக்க முடியாது.

பொது நடைமுறையில் சில வரையறைகளை விதித்தபடி, சாதி ஒழிப்புக்காக நாம் உழைக்க வேண்டும், அப்போது தான் சமூகவிழிப்புணர்வு ஏற்பட்டு, படிப்படியாக சாதி நோய் மனித மனத்திலிருந்து- சமூகமனத்திலிருந்து ஒழியும்.

ஆகவேதான் நடைமுறை சாத்தியத்தைக் கருத்திற்கொண்டு, பாடசாலைக்கல்வியின் அபிவிருத்தியைவேண்டி, ஒட்டுமொத்த சமூகநோக்கில் சில வரையறைகளை

(11 ஆம் பக்கம் பார்க்க)

# உறுதியின் வடிவம்

அம்பாறையில் நிந்தவூர் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர்தான் செல்வன் பொறிவெடி செய்வதில் நிபுணத்துவம் வாய்ந்த இவர் தவறுத லான ஒரு வெடிவிபத்தின்போது தன் இரு கைகளையும், இரு கண் களின் பார்வையையும் இழந்தவர்.

தற்போதைய நிலையில் வட—தமிழீழத்தின் பல பகுதிகளில் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அவரை, உங்களுக்கு அறியத் தருகின் றோம்.

**1985**

"என்ரை காலை எடுத்துப் போட்டினம் அண்ணை" - அந்த வைத்தியசாலையின் கட்டிடங்கள் முழுவதும் அதிரும் வண்ணம் பரிதாபமாகக் கத்திக்கொண்டிருந்தான் அறிவு.

அவனுக்கு அருகில் கிட்டண்ணை நின்றார். மற்றத் தோழர்கள் சற்றுத் தள்ளி நிலத்தைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அறிவு, வயதில் குறைந்தவன். ஒரு இடத்தில் நிற்காமல் எந்நேரமும் சுறுசுறுப்பாக நிற்கும் அவனுக்கு ஏற்பட்ட அந்த நிலையை எவராலுமே தாங்க முடியாமல் இருந்தது.

கிட்டண்ணைதான் அவனுக்கு அருகில் இருந்து அவனது தலையைத் தடவிக் கொண்டிருந்தார்.

"ரஷ்யாவில் ஒரு விமானஓட்டி—நீ கேள்விப் பட்டிருப்பாய், இரண்டு கால்களையும் இழந்த பின்பும் விமானம் ஓட்டினார், சண்டைக்குப் போனார்."

அறிவுக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக கிட்டண்ணை சொல்லிக் கொண்டிருந்தார். அவரின் கண்கள் கலங்கிப் போயிருந்தன. முதன் முதலில் எம்மில் ஒருவன் கால்களை இழந்த போது நாம் இப்படித்தான் அதிகமாகக் கலங்கினோம்.

விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியின் போது நாங்கள் எத்தனை சம்பவங்களைச் சந்திக்கின்றோம் ...? இயக்கத்தின் வளர்ச்சியுடனேயே அங்கங்களை இழந்த போராளிகளின் தொகையும் அதிகரித்தது.

கால்கள் ... கைகள் ... கண்கள்... இழப்புகள் துயரம் நிறைந்தவைதான். ஆனால் இந்த இழப்புக்கள் எதுவுமே எந்தப் போராளியின் நெஞ்சத்து உறுதியையும் குறைக்கவில்லை; அவர்களின் போராட்ட நடவடிக்கைகளையும் இடை நடுவில் நிறுத்தவில்லை. இன்று அங்கமிழந்தவர்களில் பலர் இயக்கத்தின் முக்கியமான பொறுப்புகளில் செயற்படுகிறார்கள்.

செல்வனும் இப்படிப்பட்டவன்தான். அம்பாறையின் ஒரு கிராமமான நிந்தவூர்தான் அவனது கிராமம் அவன் பொறி வெடி செய்வதில் திறமையானவன். ஆனால், வழமையாக, அந்நியர்களின் பாதங்களை இலக்கு வைத்து வெடிக்கும் பொறி வெடி இவனது கையில் வெடிக்கும் என்று, எவருமே எதிர்பார்க்கவில்லை.

சில நாட்களின் பின்பு—செல்வன் தனது நிலையை உணர்ந்து கொண்டான். அருகிலேயே இருந்து அதிகமாக ஆறுதல் வார்த்தைகள் சொல்லும் தோழர்களின் செயல் எதற்கு என்பது அவனுக்கு அப்போது நன்றாக விளங்கியது. அவனால் பார்க்க முடியவில்லை மணிக்கட்டுக்குக் கீழே இரண்டு கைகளுமே இல்லை.

செல்வனின் துயரமான இந்த நிலையை தோழர்களெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்தபோது, அவன் வித்தியாசமானவனாக இருந்தான்.

வாழ்வின் இறுதிக் கணம்வரை ஒளியை அவன் காண முடியாது; அது அவனுக்குத் தெரியும். அது மட்டுமல்ல அவனால் எந்த வேலையுமே செய்யமுடியாதபடி கைகளையும் இழந்திருந்தான். இந்த நிலையில் அந்த நாட்களைப் பற்றிச் செல்வனே சொல்கின்றான்.

"மனித வாழ்க்கையில் செய்யமுடியாதது என்பது எதுவுமே இல்லை என்பதில் நான் நிறைய நம்பிக்கை உடையவன். எதற்கும் பழக்கப்படுவதற்குச் சிலகாலம் செல்கிறது. அந்த நாட்கள்தான் கடுமையான — துயரம் நிறைந்த நாட்களாகும். நானும் அப்படித்தான். பழகிய — அன்பான முகங்களைப் பார்க்க ஏங்கினேன். அது முடியாதது எனத் தெரிந்தபோது தவித்தேன். ஆனாலும் தன்னம்பிக்கையை என்றுமே நான் கைவிடவில்லை."

எப்போதுமே செல்வன் தன்னம்பிக்கை நிறைந்தவன்தான். அது இந்தியர்கள் சென்று சில காலம் — அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வுகள் மட்டக்களப்பில் நடந்து கொண்டிருந்தன. மிதிவண்டி ஓட்டப் போட்டியில் செல்வனும் கலந்து கொண்டான். மட்டக்களப்பின் தார் வீதிகளில் போட்டியாளர்களின் மிதிவண்டிகள் பறந்தன. செல்வன் தோற்க விரும்பவில்லை. முடிவுக்கு இன்னும் சிலமைல்கள்தான் இருந்தது.

செல்வனின் மிதிவண்டியின் பின் சில்லு காற்றுப் போகத் தொடங்கியது... சிறிது நேரத்தில், அவன் காற்றில்லாத மிதிவண்டியில் ஓடிக்கொண்டிருந்தான்... அந்தப் போட்டியில் செல்வன் முதலாவதாக வரவில்லை. ஆனால் அவனுக்குப் பின்னால் நாற்பது போட்டியாளர்கள் வந்தார்கள்.

தலைவர் செல்வனைச் சந்தித்த அன்றே அவனுக்கு ஒரு பணி கிடைத்தது. அவனது வியக்கத்தக்க மனவுறுதியைப் பார்த்த எமது தலைவர் அவனை உற்சாகப்படுத்தினார்; 'தன்னால் தொடர்ந்து போராட முடியும்' என்ற அவனது நம்பிக்கையை மேலும் வளர்த்தார் — அதற்கு வடிவமும் கொடுத்தார்.

'மக்களுக்கான எமது கருத்தரங்குகளில் — கூட்டங்களில் கலந்து கொள்ளும்படியும் — வைத்தியசாலைக்குச் சென்று காயமடைந்த எமது போராளிகளைச் சந்தித்து, அவர்களை தளர்ந்து போக விடாமல் உற்சாகப்படுத்தும் படியும், செல்வனுக்குச் சொன்னார்.

செல்வன் இப்போதெல்லாம் வைத்தியசாலைக்குப் போகிறான். காயமடைந்த தோழர்களுடன் கதைக்கின்றான். பெரும்பாதிப்பைச் சந்தித்தும் தளராமல் தங்கள் முன் நிற்கும் தோழனைப் பார்த்து, மற்றவர்கள் வியக்கின்றார்கள். அந்த வியப்பே அவர்களின் மனங்களில் நம்பிக்கைகளை விதைக்கின்றது.

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் ஏதோவொரு எதிர்காலக் கனவுடனேயே வாழ்கின்றான். இது எல்லா மனிதர்களிற்கும் பொதுமையானது. செல்வனிடம் அவனது எதிர்காலத்தைப் பற்றிக் கேட்ட போது.......

"எங்கள் போராளிகள் எவரும் தம் சொந்த வாழ்க்கையின் நலன்களை எதிர்பார்த்து வாழ்பவர்களில்லை நானும் அப்படித்தான் இருந்தேன். இப்போது ஒன்றும் நடந்துவிடவில்லை. கண்களும் கைகளும்தான் இல்லை. மனதில் உறுதி குறையவில்லை. காதும் வாயும் இருக்கிறது. என்னால் தொடர்ந்து போராடமுடியும். நான் இப்போ எங்கள் கருத்தரங்குகளுக்கும் கூட்டங்களுக்கும் சொல்லத்தொடங்கி உள்ளேன். என்னால் ஓரளவு மேடையில் நன்றாகப்பேசமுடிகிறது. முன்னேறுவேன் என்று நம்பிக்கையோடு இருக்கின்றேன்" என்று குறிப்பிட்டான். தொடர்ந்தும் போராட்டக் களத்தில் செல்வன் தன்னைத் தயார் செய்கின்றான்.

ஒருநாள், யாழ் நகரின் பிரபலபாடசாலை ஒன்றில் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. திரண்டிருந்த மாணவர்களிற்கும் ஆசிரியர்களிற்கும் முன்பாக, மேடையில் ஒரு ஓரமாக இருந்த செல்வனை, எவருமே கவனிக்கவில்லை. அவன் வேறுபட்டவனாகவும் தெரியவில்லை.

அவன் பேசத்தொடங்கினான் நீளக் காற்சட்டையின் பைகளிற்குள் — இரண்டு கைகளையும், ஒழித்துக் கொண்டு ஓர் கறுப்புக் கண்ணாடியுடன் தமக்கு முன்னால் நின்ற போராளியின் பின்னால் ஒரு நீண்ட கதை இருக்கிறது என்பது அங்கிருந்தவர் எவருக்குமே தெரியாது.

அவனது பேச்சு முடியும் நேரம் "உங்களுக்கு முன்னால் கறுப்புக் கண்ணாடியுடன் காற்சட்டைப் பையிலிருந்து கைகளை வெளியே எடுக்காமலும் பேசிக் கொண்டிருக்கும் என்னைப் பார்க்க அதிசயமாக இருக்கும். மனதிற்குள் சாதுவான வெறுப்பாகவும் இருக்கும், உங்களுக்கு என்னைப் பற்றிச் சொல்லாமல் போவது சரியில்லை." என்றுசொல்லிவிட்டு, கைகளை வெளியே எடுத்துக் காட்டினான்.

"எனக்குக் கைகள் இரண்டும் இல்லை. என்னால் உங்களைப் பார்க்கவும் முடியாது" என்றான்.

அவனுக்கு முன்பாக இருந்தவர்களின் இதயங்கள் அதிர்ந்தன. அந்தக் கூட்டத்தில் எழுந்த நெஞ்சை வருடும் வித்தியாசமான சத்தமும் சலசலப்பும். செல்வனுக்கு மக்களின் உணர்வுகளை விளக்கியது. எங்கோ — ஒரு போர்முனையில் தன் அங்கங்களை இழந்துவிட்ட அந்தப் போராளி, இந்த நாட்டின்விடுதலைக்காகப் போராடச் சொல்லி மற்றவர்களை வேண்டி நிற்கின்றான் என்பதை, அங்கு கூடி இருந்தவர்கள் விளங்கிக்கொண்டார்கள்.

தன்னால் இந்த நாட்டவர்களைப் போராட்டக் களத்துக்கு அனுப்ப முடியும் என்று செல்வன், உறுதியாக நம்புகின்றான்.

செல்வன் மட்டுமல்ல, அவனைப் போன்று பெரிய பாதிப்புகளைச் சந்தித்த ஒவ்வொரு போராளியும் தளர்ந்து விடாமல், புதிய வழிமுறையில் போராடத் தன்னை தயார்ப்படுத்துகின்றான்.

இங்கு, தன் ஒருகாலை இழந்துவிட்ட மேஜர் சுரேஷ் ஆனையிறவுத்தாக்குதல்நடவடிக்கையில் கவசவாகனம் ஒன்றின் பாதுகாப்புப் பொறுப்பாளராகச் சென்று வீரச்சாவை சந்தித்தது, குறிப்பிடத்தக்கது.


உறுதியின் விளக்கமாக நிற்கும் செல்வனும் ஓர் ஏக்கத்துடன் இருக்கிறன்றான்.

"நான் விடுதலையை மிகவும் நேசிக்கின்றேன் சுதந்திரத் தமிழீழத்தில் நிற்கின்றேன் என்ற உணர்வுக்காக நான் காத்திருக்கின்றேன்" எனச் சொல்கின்றான். ❖



### இரண்டு வேனிற் கால இடைவெளிக்குள்

சென்றவருடம்
வேனிற் காலத்தில்
முதுகில் எனக்கு வேர்க்குரு
போட்டது.
நிழலாய் நின்ற தோழனைக்
கேட்டேன்
இதமாய் வேர்க்குரு உடைத்தே
விட்டான்.
இந்த வருடமும் வேனிறகாலம்
மீண்டும் வேர்க்குரு.
நிழல் பக்கத்தில்தான் நின்றது
கேட்கத்தான் முடியவில்லை
எதிரியின் பாசறை
எரியிடும் சமரில்
இரண்டு கைகளையும் இழந்து
நின்றான்
எப்படி கேட்டேன்
வேர்க்குரு இப்போ முதுகில் அல்ல-
இதயத்தில்



செல்வன் (வில்டன் ரகு — நிந்தவூர்)

# மக்கள் பண்ணைகள்

தமிழீழத்தின் சமுதாய அமைப்புப் பல்வேறு வர்க்கப் படிநிலைகளைக் கொண்டுள்ளது

பல்வேறு வர்க்கங்களாக மாறுபட்டு நிற்கும் எமது சமூக அமைப்பில் - சமூகத்தின் அடித் தட்டில் இருக்கும் ஏழை - வறிய மக்களின் வாழ்வு உயர்ச்சியைக் கருத்திற் கொண்டு, தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவினரால் '' மக்கள்பண்ணைத் திட்டங்கள் '' உருவாக்கப்பட்டன.

சமுதாயத்தின் அடிநிலை என்னும் பொழுது, வாழ்வின் எந்தவித அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்யாது - நிறைவு செய்வதற்கு வலுவில்லாதவர்களாக - வாழும் மக்களையே குறிக்கிறது. இவர்கள் உடுதுணிகளோ, உணவு - உறையுள் வசதிகளோ அற்று, நடுத் தெருவில் எதிர்கால வாழ்வின் திசை தெரியாது பரிதவிக்கும் மக்கள்கூட்டத்தினர் ஆகும்.

தொழில் இல்லாமல் - தொழில் தெரிந்தும் பொருளாதார அடித்தளம் இல்லாமல் தவிக்கும் இத்தகைய மக்களுக்கு, ஓர் பொருளாதார அடித்தளத்தை அமைத்து, அவர்களின் வாழ்க்கையில் ஓர் தன்னிறைவுத் தன்மையை உருவாக்குவதற்கு நாம் மேற் கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றே இந்த மக்கள் பண்ணைகளாகும்.

இம் மக்கள் பண்ணைத் திட்டங்களின் அடிப்படைநோக்கமாக, இதில் அங்கம் வகிக்கும் குடும்பங்களின் பொருளாதார வாழ்வு உயர்ச்சியும் - சமூக வளர்ச்சியும் கருத்தில் எடுக்கப்பட்டன.

இங்கு, மக்கள் பண்ணைத் திட்டம் என்னும் பொழுது,

நிலமும், அதில் உள்ள வளங்களும் பொதுவானதாக இருக்கும். குறிப்பிட்டளவு குடும்பங்கள் இதில் பங்காளர்களாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள். அடிப்படைத்தேவைகளை எமது இயக்கம் நிறைவு செய்யும்.

இதில் பங்காளராக இருக்கும் குடும்பத்தவர்கள் பங்கீட்டு அடிப்படையில் மனித உழைப்பை வழங்குவர். அதற்குரிய கூலியையும் பெறுவார்கள். ஆனால், பெறப்படும் வருமானம் இதில் பங்கு வகிக்கும் அனைத்து உழைப்பாளர்களுக்கும் பொதுவானது ஆகும்.

இப் பண்ணைத் திட்டங்கள் பல்வேறு அம்சங்களைத் தன்னுள் அடக்குகின்றன.

இப் பண்ணைத்திட்டமானது, பங்காளர்களின் அடிப்படைப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதுடன் - அந்த மக்களின் அரசியல் விழிப்புணர்வுக்கும், அறிவு வளர்ச்சிக்கும் துணை நிற்கும். அத்துடன் அவர்களின் வாழ்விடத் தேவைகளையும் - சுகாதாரத் தேவைகளையும் நிறைவு செய்வதில் ஒத்துழைக்கும்.

இந்நிலையில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட பண்ணைத் திட்டங்களைப் பார்ப்போம்

எமது பண்ணைகளின் பங்காளர்கள் வீடின்றி - நிலமின்றி உணவுக்கு வழியற்று மாற்றுடை தெரியாமல் வாழ்ந்தவர்கள். வாழ்வைத் திட்டமிட்டு நடத்தாமல் அதற்குரிய அறிவைப் பெறாமல் - கல்வியைத் தேடுவதற்கு - கற்பதற்கு அடிப்படையான வசதிகள் இல்லாமல் இருந்தவர்கள். சுகாதார வசதிகள் என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? எனத் தெரியாமல் வாழ்ந்தவர்கள்.

இத்தகைய வறிய மக்கள் குடும்பங்களை வைத்துக்கொண்டு பரீட்சார்த்த ரீதியில் மந்துவிலில் ஓர் கூட்டுப் பண்ணைத் திட்டத்தை உருவாக்கினோம். இப்பண்ணையானது இப்படிப்பட்ட பண்ணைகளின் உருவாக்கத்திற்கும் தொடர்ந்து இத்தகைய வேலைத்திட்டங்களை வடிவமைப்பதற்கும் ஓர் உற்சாகத்தை தரும் அளவிற்கு வெற்றியளித்தது.

மந்துவில் பரீட்சார்த்தப் பண்ணையைத் தொடர்ந்து, எம்மால் ஆறு மாதங்களில் ஏழு மக்கள் பண்ணைகள் அமைக்கப்பட்டன.

இன்றைய நிலையில்எமது எட்டுப் பண்ணைகளிலும் 184 குடும்பங்கள் பங்காளர்களாக இணைந்து செயற்பட்டு வருகிறார்கள். பல்வேறு கிராமங்களிலும் 531 பரப்பு நிலத்தில் இப்பண்ணைகள் இயங்குகின்றன.

இந்தப் பண்ணைகளில் தானியங்கள், மரக்கறி வகைகள், கிழங்கு வகைகள் என பல்வேறுபட்ட பயிர் வகைகள் இடங்களுக்கு ஏற்றவாறும், தேவை - காலநிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டும் செய்கை பண்ணப்படுகிறது.

அந்நிய மூலப் பொருட்களின் வரவை எதிர்பார்த்து நில்லாமல், முற்றாக எமது சொந்த வளங்களிலேயே தங்கி நின்று, இப்பண்ணைகள் வெற்றிகரமாக இயங்குகின்றன.

பசளை இல்லை, பூச்சி கொல்லி மருந்துகள் இல்லை என்ற காரணங்களை விட்டுவிட்டு எமது வளங்களைப் பயன்படுத்தி - மனித உழைப்பை வழங்கி இப் பண்ணையின் உழைப்பாள மக்கள் இந்தப் பண்ணைகளை மலரச் செய்துள்ளனர்.

பண்படுத்தல் முதல் விளைவுப் பொருட்கள் சந்தைப்படுத்தல் வரை இதற்கிடையிலான வேலைப் பணிகளில் முடியுமானவரை மனித வலுவே பயன்படுத்தப் படுகின்றது. அத்துடன் போர்க்கால நிலைமையைக் கருத்திற்கொண்டு நீர்ப்பாசன விடயத்திலும் நீர் இறைக்கும் இயந்திரங்களையோ - எரிபொருளையோ நம்பியிராமல் பாரம்பரிய நீர் இறைக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக கோப்பாய்ப் பண்ணையில் விலங்கு வலுவுடன் இணைந்த ஏற்று முறையும், ஊரெழுப் பண்ணையில் ஐந்து கிணறுகளில் துலா-பட்டை முறையும் பயன்படுத்தப் படுகின்றன.

இத்தகைய நிலையில்தான், கோப்பாய், ஊரெழு, சுன்னாகம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பண்ணைகளிலிருந்துதானிய - மரக்கறி வகைகளைச் சந்தைப்படுத்திய தன்விளைவாக அதன் ஆரம்ப நாளிலிருந்து 15-1-1992 வரை ஏறக்குறைய இரண்டு இலட்சத்து எண்பதினாயிரம் (2 80,000) ரூபாவிற்கு மேல் வருமானமாக பெறப்பட்டுள்ளது.

இப்பண்ணைகளின் பங்காளர்களின் சமூக வாழ்வைப் பொறுத்தவரை இன்று ஓர் திருப்திகரமான நிலைமை உள்ளது.

நிலமின்றி - வீடின்றி இருந்த தொழிலாளர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு அதில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது வேறு சிலருக்கு வாழ்விடங்களைத்திருத்தி அமைப்பதற்குரிய உதவிகள் வழங்கப்பட்டன. அதே நேரம், இந்த மக்கள் இவ்வளவு காலமும் எதிர் நோக்கி வந்த குடிநீர்ப் பிரச்சினை அவர்களுக்கென்று கிணறுகள் அமைக்கப்பட்டதன் மூலம் தீர்க்கப்பட்டது.

மேலும், இப்பண்ணைகள் அனைத்திலும் நூல் நிலையங்கள், இலவசக் கல்விக்கூடங்கள், சுகாதார நிலையங்கள் நிறுவுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவை ஏற்கெனவே சில பண்ணைகளில் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. உதாரணமாக, கோப்பாய்ப் பண்ணை மூலம், பண்ணையின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களையும் அதன் அயற்கிராமத்து மாணவர்களையும் ஒன்றிணைத்து 300 க்கும் அதிகமான மாணவர்களிற்கு இலவச மாலை நேரக் கல்வி போதிக்கப்படுகிறது இதில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த பதினான்கு பயிலுனர் ஆசிரியர்கள் பங்கு கொள்கின்றார்கள்.

இப் பண்ணைகளின் வாராந்தக் கலந்துரையாடலில் இதன் பங்காளர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றார்கள். அங்கு பண்ணைகளின் செயற்பாடுகளின் குறை - நிறைகள் ஆராயப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

பண்ணைகளில் வாழும் குடும்பங்களின் நலன்களையும் - தேவைகளையும் கவனிப்பதிலும், அவர்களின் இன்ப - துன்பங்களில் பங்கெடுத்துக்கொள்வதிலும் இப் பண்ணைகளின் வழிகாட்டிகளான புலிவீரர்கள் முன் நிற்கிறார்கள்.


ஒரு காலத்தில் கசிப்பருந்திய பலர் அப்பழக்கத்தைக் கைவிட்டு, சமூகம் விரும்பி நிற்கும் மனிதர்களாக மாற்றம் பெறத் தொடங்கி உள்ளனர் தேவையற்ற வழிகளில் பணத்தைச் செலவழியாது திட்டமிடப்பட்ட ஒரு வாழ்க்கை முறையை வகுத்துக் கொள்ளவும், சிக்கனத்தைப் பேணி பொருளாதார மேம்பாட்டை பெறவும் இங்குள்ள குடும்பத்தவர்கள் இன்று கற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இந்தப் பண்ணைகள், உண்மையில் அதன் பங்காளர்கள் அனைவருக்குமே சொந்தமானது என்ற உணர்வு, இன்று அவர்கள் அனைவரது மனங்களிலும் விதைக்கப்படுகின்றது.

இங்கு செலுத்தப்படும் உழைப்பின் பலாபலன்கள் - அந்தத் தொழிலாளர்களையே சென்றடைகிறது என்ற உண்மை இன்று வெளிப்படையாகத் தெரிகிறது.

காலப் போக்கில், இந்தப் பண்ணைகளை நிர்வகிக்கும் பொறுப்பு அதன் பங்காளர்களாகிய உழைப்பாள மக்களின் கரங்களிலேயே சென்றடையும்.

ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிய பயணத்தைத் தொடங்கி இருக்கும் இந்த உழைப்பாள மக்களின் உற்சாகமும் - உறுதியும், வெற்றியின் இலக்கு அதிக தூரத்தில் இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. ★



மக்களோடு புலிகள்

| இல. | மக்கள் பண்ணையின் அமைவிடங்கள் | ஆரம்பித்த திகதி | மக்கள் பண்ணையின் விஸ்தீரணம் | குடும்ப எண்ணிக்கை | குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | மந்துவில் | 10-01-1991 | 40 பரப்பு | 16 | 98 |
| 2. | கோப்பாய் | 11-06-1991 | 50 ,, | 31 | 137 |
| 3. | ஊரெழு | 17-07-1991 | 125 ,, | 32 | 202 |
| 4. | சுன்னாகம் | 10-05-1991 | 45 ,, | 21 | 94 |
| 5. | அச்சுவேலி | 27-08-1991 | 116 ,, | 29 | 181 |
| 6. | கோண்டாவில் | 03-11-1991 | 35 ,, | 19 | 100 |
| 7. | மண்டு மட்டான் | 18-12-1991 | 40 ,, | 16 | 100 |
| 8. | அந்திரான் | 29-09-1991 | 80 ,, | 20 | 103 |
| | | | 531 | 184 | 1015 |

# சிறீலங்காவின் இராணுவ இயந்திரமும்

*சிறீலங்கா பேரினவாத அரசானது தமிழீழ மக்களின் தேசிய எழுச்சியை இராணுவ வழிமுறைகள் மூலம் நசுக்குவதற்காக திட்டமிட்டு படிப்படியாகச் செயற்பட்டு வருகின்றது.*

*அதற்காக பலமானதொரு இராணுவ இயந்திரத்தையும் கட்டியெழுப்பி அதற்கென பெருமளவு நிதியையும் கொட்டிக் குவித்துச் செலவிடுகிறது.*

*இக் கட்டுரையில் சிறிலங்கா இராணுவ இயந்திரம் தொடர்பான சில விபரங்களை மேலோட்டமாகத் தந்துள்ளோம்.*

"ஆறுமாதங்களில் பயங்கரவாதிகளைப் பூண்டோடு ஒழித்துக்கட்ட வேண்டும்." எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன வாக்கியம் இது இந்தப் புலம்பலின் பிதாமகன் முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆகும்.

1978 ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தைஉத்தியோகபூர்வமாகத் தடைசெய்துவிட்டு, 1979 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டக் குழந்தையைக் கொன்றுவிடும்முகமாக பிரிகேடியர் வீரதுங்கா. என்னும் சிங்கள இராணுவத் தளபதியை யாழ்ப்பாணத்திற்கு நியமித்துவிட்டு, திரு. ஜே. ஆர். விடுத்த கர்ச்சனை தான் மேற்குறித்த வாக்கியம்.

அன்றிலிருந்து இன்றுவரை சிங்கள இனவாத சக்திகளால், மேற்குறித்த வாக்கியம் சிறிய சிறிய மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பிரிகேடியர் வீரதுங்காவின் தலைமையின் கீழ் தான் முதன்முதலில் ஆயுதப் படையினருக்கு தமிழ் மக்களைக் கொலை செய்யும் அதிகாரங்கள் வழங்கப்பட்டு, தமிழ் இளைஞர்களை வேட்டையாட சிறிலங்கா அரசு அனுமதி அளித்தது.

அதன் பிரகாரம் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு இராணுவமுகாம்களிலும், பொலிஸ் நிலையங்களிலும் அடைக்கப்பட்டார்கள் சில இளைஞர்கள் அங்கேயே கொன்று புதைக்கப்பட்டார்கள். சிலரது உடலங்கள் தெருவீதிகளில் வீசப்பட்டன.

இராணுவ பலத்தைப் பயன்படுத்தி தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முயன்ற வரலாறு இப்படித்தான் தொடங்கியது. தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சிங்கள ஆட்சியாளர்கள் செய்ததெல்லாம் தமது இராணுவ பலத்தைப் படிப்படியாக அதிகரித்து, பிரமாண்டமான ஒரு இராணுவ இயந்திரத்தைக் கட்டியெழுப்பி, அதற்குத் தீனி போட்டுக்கொண்டிருப்பதுதான்.

இன்று சிறிலங்கா அரசிடம் பிரமாண்டமானதொரு இராணுவ இயந்திரம் உண்டு. போர்விமானங்கள், போர்க்கப்பல்கள், கவசவாகனங்கள், நீண்டதூரம் குண்டுகளைச் செலுத்தக்கூடிய ஆட்டிலறிகள், டாங்கிகள் இவை போன்ற நவீன படைக்கல வசதிகளுடன் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான படைவீரர்களையும் கொண்டு, சிறிலங்காவின் ஆயுதப்படைகள் விளங்குகின்றன.

இந்த இராணுவ இயந்திரத்தைப் பராமரிப்பதற்கென்று வருடாவருடம் பல்லாயிரம் கோடி ரூபாய்களைச் சிறிலங்கா அரசு செலவு செய்கின்றது. இவ்வளவு தொகையில் பணத்தைச் செலவு செய்து பாரியதொரு இராணுவ இயந்திரத்தைக் கட்டியெழுப்ப சிறிலங்காவிற்கு அப்படி என்ன தேவை இருக்கின்றது? பலம் மிக்கதொரு எதிரிநாடடைத் தனது எல்லையில் அது கொண்டிருக்கின்றதா? அல்லது வெளிநாட்டிலிருந்து வரும் ஆக்கிரமிப்பொன்றிற்கு முகங்கொடுக்கத் தன்னை அது தயாராக்குகின்றதா?

இவை எதுவுமே இல்லை. தமிழீழ மக்களின் விடுதலைப்போரை ஒடுக்க - அவர்களை அடிமைப்படுத்த - தமிழர்களின் விடுதலைப் படையாகிய புலிகள் இயக்கத்தை அழிக்கவே இப்படியான பாரிய இராணுவ இயந்திரத்தைக் கட்டி வளர்த்து பெருமளவு பணத்தைக் கொட்டிச் செலவழிக்கின்றது.

## ஆயுதப்படைகளின் விபரங்கள்

இன்றைய நிலையில் சிறிலங்கா அரசின் ஆயுதப் படைகளில் ஒருஇலட்சம் (100,000) போர வீரர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

ஆயுதப்படைகள் என அழைக்கப்படுவது இராணுவம், கடற் படை, விமானப்படை ஆகிய முப் படைகளையும் சேர்த்தேயாகும்.


1991 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி.

★ சிறிலங்கா அரசிடம் 80 000 பேர் கொண்ட இராணுவம் உண்டு.

★ 14,000 பேர் கொண்ட கடற் படை உண்டு.

★ 6.000 பேர் கொண்ட விமானப் படை உண்டு.

ஆகவே மொத்தம் ஒரு இலட்சம் ஆயுதப்படைகள் சிறிலங்கா அரசிடம் உண்டு.




சிறிலங்காவின் ஆயுதப் படைகள்


பொலிஸ்படை ''ஆயுதப்படைகள்'' என்ற வகைக்குள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. (இந்தப் பொலிஸ் படைக்குள்தான் 5,000 பேர்கொண்ட கொலைகாரப் படையாகிய எஸ். ரி. எவ். எனப்படும் விசேட பொலிஸ் கொமாண்டோக்களும் உள்ளடங்குகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது). இவற்றுடன் ஊர்காவற்படை, மற்றும் ஆயுதம்தாங்கிய தொண்டர் படை என்பவற்றுடன் றிசேவ் (மேலதிக) படையினரும் ஆயுதப் படைகள் என்ற வரையறைக்குள் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. இவற்றைப் ''பரா துருப்புக்கள்'' என்றே அழைப்பது உலகப் பொது விதியாகும்.

ஆனால், சிறிலங்காவைப் பொறுத்தவரையில்பொலிஸ், ஊர்காவற்படை, தொண்டர் படை, றிசேவ்படை ஆகிய ஆயுதம் தாங்கிய அனைத்துப் பிரிவினரும் தமிழர்களுக்கெதிராக, ஆயுதப் படைகளைப் போன்றே பயன் படுத்தப்படுகின்றனர்.



படத்தில் இருப்பவை சிறிலங்கா இராணுவத்தால் பாவிக்கப்படும் பீரங்கிகள் ஆகும். இடது பக்கத்தில் உள்ளது — 85 மி. மீ. — ரீ. 56 ரக பீரங்கி. வலது புறத்தில் இருப்பது — 130 மி. மீ. — ரீ. 56—1 ரக நீண்டதூர ஆட்டிலறி பீரங்கி. இங்கே மி. மீ. எனப்படுவது. சுடுகலன்களினுடைய குழாய்களின் — Barrels - உள் விட்டத்தையேகுறிக்கும். இவ்விட்டங்களின் அளவிலேயே அவற்றுக்குரிய எறிகணைகளின் அளவும் இருக்கும். அந்த வகையில் சுடுகலன்களின் குழாய் விட்டம் பெரிதாகப் பெரிதாக, அவற்றுக்குரிய எறிகணைகளின் அளவும் பெரிதாகும்; அதற்கேற்றபடி அதன் தாக்கமும் அதிகரிக்கும்.

# தமிழீழ விடுதலைப் போராட்டமும்



இடமிருந்து வலமாக —1. 'டோரா' ரக தாக்குதல் விசைப்படகு. 2. 'O. P. V.' எனப்படும் ஆழ்கடல் ரோந்துப் படகு. 3. விரைவுத் துருப்பேற்றி.

1991ஆம் ஆண்டுக்கணிப்பின்படி, சிறீலங்கா பொலிஸ்படையில் 28, 000 பேர் உள்ளனர். தேசிய துணைப்படை (National Auxiliary Force ) என்ற பெயரில் 10, 000 பேர் உள்ளனர்.

ஊர்காவல் படையில் 18,000 பேர் அங்கம் வகிக்கின்றனர். இந்த வகையில் 56, 000 பேர் பரா துருப்புக்கள் என்ற வகைக்குள் அடங்கியிருக்கின்றனர். எனவே ஆயுதப் படைகள் என்ற வகைக்குள் ஒரு இலட்சம் ( 100, 000 ) பேர் இருக்கும். அதே சமயம் ஆயுதப்படை என்ற வகைக்குள் அடங்காத அரசின் சட்ட பூர்வ ஆயுதபாணிகளான 56, 000 பரா துருப்புக்கள் இருந்து ஆயுதப் படைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதைவிட சிறிய சிறிய ஆயுதக் குழுக்களும் அரசிடம் உண்டு.

ஆயுதப்படைகள், பராதுருப்புக்கள் என்ற இந்த இரண்டு வகையினரையும் சேர்த்துப் பார்த்தால் இன்று ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் (1, 50, 000) மேற்பட்ட எண்ணிக்கையை உடைய ஆயுதபாணிகள் சிறீலங்கா இராணுவ இயந்திரத்தின் அங்கத்தினராக உள்ளனர்.

## இராணுவ இயந்திரத்தின் விரிவாக்கமும் இராணுவச் செலவீனங்களும்

சிறீலங்காவின் இராணுவ இயந்திரமானது 1983 ஆம் ஆண்டிலிருந்து முழுமூச்சுடன் கட்டி வளர்க்கப்படத் தொடங்கியது.

தேசிய பாதுகாப்பு அமைச்சு என ஒன்றை திரு. லலித் அத்துலத்முதலியின் தலைமையில் உருவாக்கிய அப்போதைய சிறீலங்கா ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, இராணுவ விரிவாக்கத்தின் கதவைத் திறந்து விட்டார்.

இஸ்ரேல், பாகிஸ்தான் தென்ஆபிரிக்கா. சீனா போன்ற நாடுகளிடம் இருந்து இராணுவ உதவிகளையும், ஆலோசனைகளையும் பெற்று ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைப் படையில் சேர்த்து, சிறீலங்கா அரசு தனது படைப்பலத்தைப் பெருக்கிக் கொள்ளத் தொடங்கியது.

1983ஆம் ஆண்டு சுமார் 15, 000 பேருடன் சாதாரண எஸ். எல் ஆர். 303ரக சுரிகுழல் துப்பாக்கிகளுடன் இருந்த சிறீலங்காவின் ஆயுதப்படை, 1991 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட போர்வீரர்களின் எண்ணிக்கையுடன் நவீனரக ஆயுததளபாடங்களுடன் ஒரு பலம் மிக்க இராணுவ இயந்திரமாக மாறிநிற்கிறது

1987 ஆம் ஆண்டு இந்திய-சிறீலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரை சிறீலங்கா அரசானது தனது தரைப்படையைக் கட்டிவளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தது.

## படை விரிவாக்கம்

ஆனால் தமிழீழ - இந்தியப் போரின் முடிவுக்குப் பின்னர் மீண்டும் சிறீலங்கா இராணுவத்துடன் போர் ஆரம்பமாகியபோது, சிறீலங்காவின் தரைப்படை புலிகளைச் சமாளிக்கமுடியாது திண்டாடியது. இதனால் விமானப் படையையும், கடற்படையையும் பலப்படுத்திப் புலிகளுக்கு எதிராகப் போராடவேண்டிய தேவை சிறீலங்கா அரசுக்கு எழுந்தது. இதன் காரணமாக 1990 /91 ஆம் ஆண்டுகளில் கடற்படையும் விமானப்படையும் விரிவுபடுத்தப்பட்டன.

1988/ 89 ஆம் ஆண்டுகளில் சிறீலங்காக் கடற்படையில் 5,500 பேர் இருந்தனர். விமானப்படையில் 3,700 பேர் இருந்தனர். ஆனால் 1990/ 91 ஆம் ஆண்டுகளில் கடற்படை சுமார் 15,000 ஆக அதிகரிக்கப்பட்டது விமானப்படை 5,000 ஆக அதிகரிக்கப்பட்டது. இந்த ஆட்தொகை அதிகரிப்புக்கு ஏற்ற விதத்தில் நவீன இராணுவத் தளபாடங்களையும் கொள்வனவு செய்தது.

**இந்த அடக்குமுறை இராணுவ இயந்திரத்தை அடித்து நொருக்குவதில் நாம் நம்பிக்கைக்குரிய வெற்றிகளைப் பெற்று வருகின்றோம். பல கோடி ரூபா செலவு செய்து, சிறீலங்கா அரசு கொள்வனவு செய்யும் பல இராணுவத் தளபாடங்களை சிங்களப் படைகளிடமிருந்து கைப்பற்றி வருகின்றோம். அத்துடன் சிங்கள இராணுவ இயந்திரத்திற்கு இறுதி அடி கொடுக்கக் கூடிய வகையில் தமிழர் படைபலத்தைப்படிப்படியாகப் பெருக்கியும் வருகின்றோம்.**

அத்துடன் 1988/ 89ஆம் ஆண்டுகளில் இருந்ததைவிட சிறீலங்காவின் தரைப்படையும் 1990/91 இல் அதன் ஆள் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தி விட்டது.

1988/ 89ஆம் ஆண்டுகளில் சிறீலங்கவின் தரைப்படை 40, 000 போர்வீரர்களைக் கொண்டிருந்தது. இன்று அது 80. 000 ஆக அதிகரிக்கப்பட்டு விட்டது இத்துடன் புலிகளுடனான போர் அநுபவங்களின் வெளிப்பாடாக, நீண்டதூரம் பாயும் ஆட்டிலறிகளையும், சக்திமிக்க கவசவாகனங்களையும் பெருமளவில் தரைப்படை கொள்வனவு செய்யவேண்டிய கட்டாயம் எழுந்தது.

இவ்விதமாக நவீன ஆயுத தளபாடங்களுக்குரிய தேவை எழுந்த பொழுதிலும் அவற்றைக் கொள்வனவு செய்வதில் சிறீலங்கா அரசு பெரும் தடைகளை எதிர் நோக்கியது

நவீன ஆயுதங்களின் அதி உயர் விலை காரணமாகவும், அத்தகைய ஆயுதங்களை சிறீலங்கா அரசுக்கு வழங்க பல மேற்கு நாடுகள் மறுத்த காரணத்தாலும் திண்டாடிக்கொண்டிருந்த சிறீலங்கா அரசிற்கு, கிழக்கு ஐரோப்பிவில் ஏற்பட்ட அரசியல் பிரளயம் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திவிட்டது.

கிழக்கைரோப்பிய நாடுகளில், குறிப்பாக யூகோஸ்லாவியா, செக்கோசிலவாக்கியா, ஹங்கேரி போன்ற நாடுகள் தம்மிடமிருந்த மிதமிஞ்சிய ஆயுத தளபாடங்களை குறைந்த விலைகளில் எந்த நாட்டிற்கென்றாலும் விற்பனைசெய்யத் தயாராக இருந்தன. அதே வேளை மலிவுவிலையில் சீனாவும் சிறீலங்காவிற்கு ஆயுதங்களை விற்கத் தயாராக இருந்தது.

கடற்படைப் படகுகள், கவசவாகனங்கள் போன்ற நீண்டதூரம் குண்டுகளைத் தள்ளக்கூடிய ஆட்டிலறிகள் அவற்றிற்கானவெடிமருந்துகள், உதிரிப்பாகங்கள் என்பவற்றை மேற்குறித்த நாடுகளிடமிருந்து சிறீலங்கா அரசு குறைந்த விலையில் கொள்வனவு செய்தது

அதே வேளை சீனாவிடமிருந்து புதிய போர் ஜெட் விமானங்களையும், Y12, Y8 போன்ற பாரிய விமானங்களையும் சிறீலங்காவின் விமானப்படை கொள்வனவு செய்தது.

கடற்படையைப் பொறுத்தளவில் அதிவேக டோரா சண்டைப்படகுகள், ரேடார் கருவி பொருத்தப்பட்ட சக்திமிக்க கண்காணிப்புக் கப்பல்கள், அதிவேக துருப்பேற்றிகள் ( Fast Troops Carrier ) போன்றவற்றையும் அண்மைக்காலங்களில் இஸ்ரேலிடமிருந்தும் தென்கொரியாவிடமிருந்தும் கொள்வனவு செய்துள்ளது.

மலிவுவிலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தாலும் கூட இந்த ஆயுதக் கொள்வனவுகள், ஆட்தொகை அதிகரிப்புக்களுக்கெல்லாம் சிறீலங்கா அரசிற்கு பெருமளவு நிதி வேண்டியிருந்தது. இதன் காரணமாக சிறீலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனம் என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளது.

## பாதுகாப்புச் செலவீனங்கள்

10 வருடங்களுக்கு முன்னர் அதாவது 1981 ஆம் ஆண்டு, சிறீலங்கா அரசின பாதுகாப்புச் செலவீனம் அரசின் மொத்தச் செலவீனத்தில் 3 சதவீதமாகவே இருந்தது.

ஆனால் 1991ஆம் ஆண்டு, சிறீலங்கா அரசின் மொத்தச் செலவீனத்தில் 20 சதவீதம் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு செலவாக்கப்பட்டிருந்தது.

அதாவது 1981 ஆம்ஆண்டு சிறீலங்கா அரசு 1,100 கோடி ரூபாவையே பாதுகாப்புத்துறைக்கெனச் செலவு செய்தது ஆனால் 1991 ஆம் ஆண்டு 16, 700 கோடி ரூபாவைத் தனது இராணுவ இயந்திரத்திற்கு நிதியாக வழங்கியுள்ளது. இன்னுமொருவகையில்சொல்லப்போனால் மொத்தம் 25அமைச்சுக்களைக் கொண்டு விளங்கும் சிறீலங்கா அரசு இயந்திரத்தில் ஒரு அமைச்சக வேலையாக இருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்காக, மொத்தச் செலவீனத்தில் 1/5 பங்கை ஒதுக்குவதென்பது, சாதாரணவிடயமல்ல.இது சிறீலங்காவின்

(11ஆம் பக்கம் பார்க்க)

கடந்த 10 வருடங்களில் சிறீலங்கா அரசுகள் பெற்ற வெளிநாட்டு உதவிகளும் சிறீலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனங்களும்.

| ஆண்டு | வெளிநாட்டு உதவி | | பாதுகாப்புச் செலவு | |
|---|---|---|---|---|
| 1981 | 8,208 | கோடி ரூபா | 1,100 | கோடி ரூபா |
| 1982 | 9.777 | ,, | 1,117 | ,, |
| 1983 | 9,837 | ,, | 1,759 | ,, |
| 1984 | 12,137 | ,, | 2,482 | ,, |
| 1985 | 12.339 | ,, | 5,716 | ,, |
| 1986 | 15,917 | ,, | 9,777 | ,, |
| 1987 | 14,765 | ,, | 11,386 | ,, |
| 1988 | 19,563 | ,, | 9,373 | ,, |
| 1989 | 18,410 | ,, | 8,792 | ,, |
| 1990 | 23,247 | ,, | 14,601 | ,, |
| 1991 | — | — | 16,700 | ,, |




"கண்ணிவெடித் தாக்குதல் நடந்ததாம்; பத்து ஆமி செத்துப் போனாங்களாம்".

இரண்டு வரிகளில் இந்தச் செய்தி முடிந்துவிடும், ஆனால் இதனுடையபெறுமதி - இதன் பரிமாணம் - மிகப்பெரியது.

இதே வேளை கண்ணிவெடித் தயாரிப்புகளில் - முயற்சிகளில் நாம் இழந்துள்ள செல்வங்களின் பெறுமதியை நினைத்தால் கைதடி - அடம்பன் - நீராவியடி - வஞ்சியன் குளம்...... என்ன தவறு நடந்தது?

பெரும்பாலும் இதனைச் சொல்வதற்கு இதனுடன் சம்பந்தப்பட்ட எவருமே மிஞ்சவில்லை.

இவ்வாறான சம்பவங்களில் ஒன்றுதான மன்னாரை அதிரப் பண்ணிய வஞ்சியன் குளம் விபத்து. மன்னார்ப்பிராந்தியத் தளபதி லெ. கேணல் வேணு, மேஜர் குகன், மேஜர் சயந்தன், கப்டன் குட்டிமணி ஆகியோரை எம்மிடமிருந்து பறித்தெடுத்த சம்பவம் அது. பூநகரியிலிருந்து முள்ளிக்குளம் வரையிலான இந்தப் பிராந்தியத்திலுள்ள மக்கள் அனைவருக்குமே இவர்கள் நன்கு பரிச்சயமானவர்கள். ஆகையால் இவர்களின் இழப்பு இப்பிராந்தியத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் எதிரொலித்தது.

இச்சம்பவத்தில் எம்மால் இழக்கப்பட்டவர்களுள் ஒருவரான கப்டன் குட்டிமணி பேசாலையைச் சேர்ந்தவன். 1988ஆம் ஆண்டு இந்தியப் படையினரின் நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலத்தில் எம்முடன் இணைந்து கொண்டவன். பயிற்சி முடிந்ததும் வெடிகுண்டுகள் தயாரிக்கும் பிரிவில் பணிபுரிந்தான். கண்ணிவெடிகள் வைப்பதில் கைதேர்ந்தவன். இந்தக் காடும், வெளியும் எமக்கே சொந்தம் என்பதை மிதிவெடிகள் மூலம் இந்திய இராணுவத்தினருக்கு உணர்த்திக் காட்டியவன். சொந்தக்காலுடன் வந்த இந்திய இராணுவத்தை செயற்கைக் காலுடன் அனுப்பி வைத்தவன்.

மேஜர் குகன் - மேஜர் சயந்தன் இருவருமே 1985ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இயக்கத்துடன் இணைந்து கொண்டவர்கள். இவர்களில் குகன் மன்னார்ப் பிராந்தியத்திற்கு அப்பாலும் அநேக போர்க்களங்களைக் கண்டவன். இந்திய இராணுவம் எமது மக்கள் மேல் போர் தொடுத்தபோது, அதை யாழ்ப்பாணத்தில் பல களங்களில் எதிர் கொண்டவன். முதன் முதல் இந்தியப் படையை ஆயுதங்களுடன் சரணடையச் செய்த தாக்குதலிலும் பங்குபற்றியவன். கொண்டச்சி, கஜுவத்தை, வஞ்சியன்குளம் என பல்வேறு இடங்களிலும் சிறிலங்காப் படையினருக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தியவன்.

உப்புக்குளத்தைச் சேர்ந்த மேஜர் சயந்தன் தளபதி வேணுவுடன் இணைந்து மருத்துவக்குழுவில் பணியாற்றியவன். அத்துடன் போர்க்களத்தில் பணியாற்றத் தகுதி படைத்த சாரதியுமாவான் நீண்ட காலமாக தொழில் முறையில் வைத்தியம் பார்க்கும் வைத்தியர்களே வியக்கும் வண்ணம் மருத்துவப் பணிகளை ஆற்றியவன். தம்பனையில் நிகழ்ந்த சண்டையில் காயமடைந்த போராளிகளைக் காப்பாற்றி வாகனத்தில் கொண்டு செல்லும்போது குண்டு வீச்சு விமானம் ஒன்று அந்த வாகனத்தைத் துரத்தித் துரத்திக் குண்டுகளைப்போட்டது. "எனது வேகத்திற்கேற்ப குண்டு வீசுவதற்கு இனிமேல்தான் நீங்கள் பழக வேண்டும்" என்ற செய்தியை உணர்த்தும் வகையில், மிக வேகமாக வாகனத்தைச் செலுத்தி வந்து அவர்களைக் காப்பாற்றியவன்.

ஒருமுறை இராணுவ நிலைகளை வேவு பார்க்கச் சென்றபோது இளைய தோழன் ஒருவனால் இவனது பிரத்தியேக ஆயுதம் இழக்கப்பட்டது. அந்தச் செய்தி மட்டும்தான் விசேட தளபதி சுபனைச் சந்தித்தது. அடிபட்ட புலியாகத் திரிந்த இவன் மிகவும் ஆபத்தான பகுதி ஒன்றில் இரவு நேரம் வந்துகொண்டிருந்த ஜீப் ஒன்றின் மீது தாக்குதல் தொடுத்து அவ்வண்டி எரிந்து கொண்டிருக்கையில் நாலுக்கு மேற்பட்ட ஆயுதங்களைக் கைப்பற்றி அவற்றுடன் சென்றுதான் விசேட தளபதியைச் சந்தித்தான். இதுதான் புலிகளுக்கேயுரிய பாரம்பரியம். இந்த வழிவழியாக வந்த சொத்து என்னிடமும் உள்ளது என்பதை நிரூபித்துக் காட்டியவன்.



மன்னார் மாவட்டத் தளபதி

லெப். கேணல்

## வேணு

(பிரான்சிஸ் றொபேட் சேவியர்)

ஆண்டாங்குளம்,
அடம்பன்.

பிறப்பு : 19.10.1964
வீரச்சாவு: 06.01.1992

"ஆட்காட்டி வெளி" இந்தப் பெயரைக் கேட்டாலே சிங்கள இராணுவத்திற்கு மூக்குச் சிவக்கும். பொதுவாக அடம்பனுக்கு அப்பாலுள்ள இடங்கள், அவர்கள் வரைபடத்திலும் உயர இருந்து விமான மூலமுமே பார்க்க வேண்டிய பகுதிகளாகும். இப்பகுதிகளுக்குள் கால் வைக்க முனையும் ஒவ்வொரு கட்டத்திலும் அச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சிங்கள இராணுவத்தினர் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாதபடியான தாக்குதல் நடக்கும். இங்கு தான் மன்னார்ப்பிராந்தியதளபதி வேணுவும் உருவானான்.

1984ஆம் ஆண்டு இயக்கத்தில் இணைந்து கொண்ட இவன் மன்னார்த்தளபதியாக விளங்கிய லெப். கேணல் ராதாவின் பயிற்சி முகாமில் உருவாகியவன். மன்னார்த் தீவினுள் சிறீலங்கா இராணுவம் எமது இரு போராளிகளைச் சுட்ட போது மன்னார்க் கோட்டைக்குப் பக்கத்தில் லெப். கேணல் ராதாவின் தலைமையிலான அணி பதிலடி கொடுத்தது போல, 1988ஆம் ஆண்டு அடம்பனில் எமது இரு போராளிகளைக் கைது செய்த சிறீலங்கா இராணுவம் அவர்களை இந்திய இராணுவத்திடம் கையளித்ததற்கு பதிலடி கொடுக்கத் தீர்மானித்தான். அடம்பன் முகாமுக்கு மிகக் கிட்டிய தூரத்தில் ஜீப்பில் வந்த சிறீலங்காப் படை உயர் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தி இராணுவ ரீதியில் பதிலடி கொடுத்தான்.

பயிற்சி முகாமில் இருந்து வெளி வரும்போது இவன் ஒரு வைத்தியனாகவே வந்தான், விஞ்ஞானப் பிரிவில் அவன் கற்ற கல்வி மருத்துவப் பயிற்சிகளை அவன் பெற்றுக் கொள்வதற்கு பெரிதும் உதவியது. இவன் பங்கு கொண்ட முதற் தாக்குதல் மன்னார் மாவட்டப் போராளிகளைப் பொறுத்தவரை மிகமுக்கியமானதாகும். மன்னார்த் தீவினுள் அமைந்திருந்த இந்த மாவட்டத்தின் பிரதான பொலிஸ் நிலையத்தின் மீது நிகழ்த்தப்பட்ட இத் தாக்குதலின் போது காயமடைந்த போராளிகளுக்கு வைத்தியனாகச் சென்றான். அன்றிலிருந்து மன்னார் மாவட்டப் போராளிகளைப் பொறுத்தவரை இவனே டாக்டர். ஆனாலும், இடையிடையே இடைக்கும் போர்க்களங்களிலும் தனது முத்திரையைப் பதிக்க இவன் தவறவில்லை.

17. 01. 1986 அன்று நாயாற்று வெளியில் அப்போதைய மன்னார் மாவட்டத்தளபதியான லெ. கேணல் விக்ரரைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினரை கண்டல் சந்தியில் வழிமறித்துத் தாக்கிய குழுவில் இவனும் ஒருவனாக இருந்தான். "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" என்ற நிலையில், ஓடிய இராணுவம் நீண்ட காலத்துக்கு அந்தப் பக்கத்தையே நினைக்காமலிருந்தது.

பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் போன்ற மிகப் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பலத்த போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியிலேயே மன்னார் - அடம்பன் போன்ற வைத்திய சாலைகளுக்குச் செல்ல வேண்டும். இவனோ அந்த நிலையை மாற்றி மக்களைத்தேடி மருத்துவம் செய்யும் மருத்துவனானான். ஆட்காட்டி வெளியில் வைத்திய நிலையம் ஒன்றினை நிறுவி அப்பகுதி மக்களின் அன்புக்குப் பாத்திரமானான். இரவு - பகல் எந்த நேரமானாலும் பொதுமக்களுக்கோ, போராளிகளுக்கோ வேணுதான் டாக்டர்.

இக்காலத்தில் மக்களிடையே மிகவும் பிரபலமானான் வேணு. அவர்களோடு அவன் பழகிய விதம் - மக்களை அரவணைத்துச் செல்லும் பாங்கு என்பனதான், குடும்பத்தவர் எவருமே இந்த மண்ணில் இல்லாத நிலையில் இவன் மறைந்த போது உனக்குச் சொந்தங்கள் நிறைய உண்டு எனக் கூறிற்று. பல்லாயிரக்கணக்கில் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தி வரண்ட பூமியாம் மன்னாரைத் தம் கண்ணீரால் ஈரமாக்கினர் அப்பகுதி மக்கள்.

07. 11 1989 அன்று வில்பத்துக் காட்டில் "பச்சைப் புலிகள்" எனப்படும் சிறீலங்காப் படையினர் மேற் கொண்ட தாக்குதலை இவன் முறியடித்த விதம் சாதனைக்குரியதாகும். பெட்டியுடன் இணைக்கப்பட்ட உழவு இயந்திரத்தில் தனது தோழர்கள் 14 பேருடன் பயணமாகிக் கொண்டிருந்தான் இவன். அப்போது, மறைந்திருந்த சிறீலங்காப் படையினர் இவர்கள்மேல் தாக்குதல் தொடுத்தனர். பாதுகாப்பான நிலைகளில் இராணுவத்தினர் - பாதகமான நிலையில் போராளிகள். ஆனாலும் இவன் எதிர்த்தாக்குதல் தொடுத்தான். சண்டையை எமக்குச் சாதகமாக மாற்றினான். அதனால், உயிரிழந்த தமது சகா ஒருவனைக்கூட விட்டு விட்டு சிறீலங்காப் படை தப்பியோடியது. உயிரிழந்த இராணுவத்தினனது உடலுடன் ஒரு சில ஆயுதங்களையும் கைப்பற்றி வந்தான இவன். இத் தாக்குதலில் ஈடுபட்ட அணிக்குத் தலைவனும் இவனே. வைதநய ஓூம் ஆவனே.

இந்திய இராணுவத்துடனான போர் நிகழ்ந்த காலப்பகுதி இவனை மன்னார் மாவட்டத்தன் எதிர்காலத் தளபதியாக இனங்காட்டியது. இயக்கத்தின் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் வல்லவன் இவன்.

1991ஆம் ஆண்டு இவன் மன்னார் மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்றான். அக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள தமது திட்டங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைமையைத் தோற்றுவித்தது சிறீலங்கா இராணுவத்தினருக்கு.

அன்று அது ஒரு கொடியநாள். ஏற்கெனவே மிகப்பெரிய வெற்றிகளையெல்லாம் (60 இராணுவத்தினர் பலியான சம்பவம் உட்பட) எமக்குத்தந்த வஞ்சியன் குளத்தில் எமக்கு ஒரு சோகம் காத்திருந்தது. சிறந்த தளபதி - திறமையான மருத்துவன் - மன்னார் மக்களின் அன்புக்குப்பாத்திரமான வேணுவை இழந்தோம்.

அவனுடன், மேஜர்சயந்தன், மேஜர் குகன், கப்டன் குட்டிமணி என்று நால்வரை - எங்கள் நான்கு கண்மணிகளை வெடி மருந்து விபத்தில் நாம் இழந்தோம்.

— சுரேஸ்

ஜாலியன்வாலாபாக்

# படுகொலையும் - பழிவாங்கலும்

நவீன வரலாற்றில் நிகழ்ந்த மனிதப் படுகொலைகளில் ஜாலியன்வாலாபாக படுகொலையும் ஒன்றாகும்.

இந்தியாவிலுள்ள பஞ்சாப் மாநிலத்தில் அமைந்திருக்கின்ற ஜாலியன்வாலாபாக் என்ற மைதானத்தில் 1919ஆம் ஆண்டு எப். 13ஆம் திகதி இப்படுகொலை நடந்தது.

அதனாலேயே அப்படுகொலை ஜாலியன்வாலாபாக் படுகொலை என அழைக்கப்படுகின்றது.

அப்போது இந்திய தேசத்தை ஆக்கிரமித்து வைத்திருந்த பிரிட்டிஷ் படைகளினால் நடாத்தப்பட்ட இக் கொடூர — காட்டுமிராண்டித்தனமான படுகொலை நிகழ்ச்சியில் 2000 இந்தியர்கள் கொல்லப்பட்டனர்.

முதலாம் உலகப்போர் 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிவடைந்ததைத் தொடர்ந்து பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடமிருந்து இந்தியா சில நன்மைகளைப் பெறும் என, இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் நம்பினார்கள்.

அதன் மூலம் படிப்படியாக இந்திய அரசு இயந்திரத்தில் இடம் பிடித்து, தன்னைத்தானே ஆளுகிற ஒரு அரசியலமைப்புச் சட்டமொன்றை உருவாக்கி, இந்திய தேசத்திற்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்துவிடலாமென எதிர்பார்த்தனர்.

ஆனால், இந்தியர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, இந்திய மக்களின் அரசியல் அபிலாசைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, ஒரு புதிய சட்ட வரைவை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியர்கள் மீது திணித்தனர்.

ஆனால் அச் சட்ட வரைவை முழுமையாக எதிர்க்க இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் முடிவு செய்தனர்.

நாடு தழுவிய ரீதியில் - அகிம்சை வழியில் எதிர்ப்பு நடவடிக்கைகளை இந்திய மக்கள் எடுத்தனர். ஆக்கிரமிப்பாளர்களான பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் எதிர்ப்புக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

இந்திய மாகாணங்களுள் ஒன்றான பஞ்சாப்பின் ஆளுநராக இருந்த மைக்கல் ஓ டயர் ( Michael O' Dwyer ) என்ற பிரிட்டிஷ்காரன் தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் மக்களின் எதிர்ப்பை ஆயுத பலம் கொண்டு ஒடுக்க முடிவு செய்தான்.

அதன் பொருட்டு பஞ்சாப் மாகாண இராணுவத் தளபதி ஜெனரல் டயரை ( General Reginold Edward Harry Dyer) அழைத்து இராணுவவழியில் மக்களின் எதிர்ப்பை நசுக்குமாறு பணித்தான்.

எப். 13ஆம் திகதி மாலை, அமிர்தசரஸ் நகரிலுள்ள ஜாலியன்வாலாபாக் மைதானத்தில் ஒரு எதிர்ப்புக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

ஆனால் சகல கூட்டங்களும் தடை செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியாளர்கள எச்சரிக்கை விடுத்தனர்.

மக்கள் மிரட்டல்களுக்குப் பணியவில்லை. ஏற்கெனவே தீர்மானித்தபடி ஜாலியன்வாலாபாக்கில் மக்கூடத் தொடங்கினர்.

கூட்டத்திற்கு சுமார் 5,000பேர் வந்திருந்தனர் தேசபக்திப் பாடல்களுடன் கூட்டம் ஆரம்பமானது.

கூட்டம் நடைபெறுவதைக் கேள்வியுற்ற இராணுவத்தளபதி ஜெனரல் டயர் ஆத்திரம் கொண்டு, தனது போர் வீரர்களுடன் ஜாலியன்வாலாபாக் நோக்கிப் புறப்பட்டான்.

கூட்ட மைதானத்திற்குச் செல்லும் பாதை மிக ஒடுங்கியதாக இருந்ததால் அவன் கொண்டு சென்ற கவச வாகனங்களையும், இயந்திரத்துப்பாக்கிகளையும் வெளியே விட்டுவிட்டு 90 போர் வீரர்களுடன் கூட்ட மைதானத்திற்குள் நுழைந்தான்.



உதயம் சிங்

மைதானத்துள் சென்றதும், தனக்கு வலப்புறமாகவும் இடப்புறமாகவும் அணிவகுத்து கூட்டத்தினரை நோக்கி நிலையெடுக்கும்படி போர்வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

கூட்டத்தைக் கலைந்து செல்லும்படி கேட்கவுமில்லை; கூட்டத்தினரை எச்சரிக்கை செய்யவுமில்லை.

திடீரென, சுடும்படி கட்டளையிட்டான். படையினர் சுடத்தொடங்கியதும் மக்கள் மிரண்டு ஓடினர். இரத்தம் பீறிட்டுப்பாய்ந்தது.

படுகொலை நடைபெற்ற போது ஜெனரல் டயரினது மெய்ப்பாது காவலனாக நின்ற '' சார்ஜன் அண்டர்சன் '' ( Sergent w. j. Anderson ) என்ற போர்வீரன் பின்னர் சொன்னான்...



ஆளுநர் மைக்கல் ஓ டயர்

'' நாங்கள் சுடத்தொடங்கிய போது கூட்டம் மிரண்டு விழுந்தது. பின்னர் எழுந்து ஓடியது. இடையிடையே துப்பாக்கிச் சூடுகள் நிறுத்தப்பட்ட அந்த ஒரு சில வினாடிகளில், குண்டடிபட்டு விழ்ந்தவர்களது முனகல்கள் எனக்குக் கேட்டது...

எந்தெந்தத் திசைநோக்கி துப்பாக்கிச் சூடுகளை நடாத்தவேண்டுமோ அங்கெல்லாம், ஜெனரல் டயர் தனது கைவிரலால் சுட்டிக் காட்டியபடி கட்டளையிட்டுக் கொண்டிருந்தார்.''

இப்படுகொலையில் பங்குபற்றிய இன்னொரு பிரிட்டிஷ் போர்வீரனான கப். பிறிக்ஸ் ( Captain Briggs ) பின்வருமாறு சொல்லியிருந்தான்.

'' நாங்கள் சுடத்தொடங்கிய போது கூட்டம் இரண்டு பகுதியாகப் பிரிந்து ஓடியது. முதலில் ஒரு பகுதி மீது சுடும்படி எங்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் மறு பகுதி மீது சுடும்படி பணிக்கப்பட்டோம்.

துப்பாக்கிகளின் ரவைகள் தீர்ந்த பினனர் மீண்டும் ரவைகளை நிரப்பி தொடர்ந்தும் சுடும்படி ஜெனரல் டயர் கட்டளையிட்டான்.

அம் மைதானத்தில் எங்கெங்கு மக்கள் அடர்த்தியாக - நெருக்கமாக நின்றார்களோ அங்கெல்லாம் சுட்டிக்காட்டி, சுடும்படி கட்டளையிட்டுக் கொண்டிருந்தான்''.

ஜெனரல் டயரினது நேரடி உத்தரவின் பேரில் அவனது காட்டுமிராண்டிப்படைகள் தொடர்ச்சியாக 10 நிமிடங்கள் சுட்டுத்தள்ளின.

ஜாலியன் வாலாபாக் மைதானம் மனித இரத்தத்தால் மூழுக்காட்டப்பட்டது.

இப்படுகொலைச் சம்பவம் நடந்து சுமார் எட்டு மாதங்கள் வரை உலகின் கண்களுக்கு மூடி மறைக்கப்பட்டது.

இறுதியில் படுகொலைச் சம்பவம் வெளிச்சத்திற்கு வந்தபோது நீதி விசாரணை ஒன்று நடாத்தப்பட வேண்டும் என அரசாங்கம் நிர்ப்பந்திக்கபபட்டது:

கன்ரர் பிரபு ( Lord Hunter ) என்பவரது தலைமையில் பிரிட்டிஷ் பிரசைகளையும், இந்தியப் பிரசைகளையும் கொண்ட விசாரணைக் குழுவொன்று உருவாக்கப்பட்டு விசாரணை நடந்தது.

விசாரணைக் குழுமுன் ஜெனரல் டயர் திமிராகப் பதிலளித்தான்.

மைதானத்திற்குச் செல்லும் நுழைவாயில் அகலமானதாக இருந்திருப்பின் இயந்திரத்துப்பாக்கிகளையும் உள்ளே கொண்டு சென்று பயன்படுத்தியிருப்பீர்களா? என ஒரு விசாரணைக் குழு அங்கத்தவர் கேட்ட கேள்விக்கு, '' ஆம்! '' என ஜெனரல் டயர் பதிலளித்தான்.

யாராவது ஒருவர் ஜாலியன் வாலாபாக்படுகொலையைப் பற்றி ஜெனரல் டயரிடம் கேள்வி கேட்டால் அதற்கு அவன் எப்பொழுதும் அளித்த பதில்...

'' ஆம், நான் அதேமாதிரி ஒரு படுகொலைச் சம்பவத்தை இனியும் செய்யத் தயார்.'' இத்தகைய கொலை வெறியனுக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்னவெனில், இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்குத் திருப்பி அழைக்கப்பட்டது மட்டும்தான்.

பிரிட்டிஷ் அரசாங்கம் விசாரணைக் குழுவொன்றை அமைத்து விசாரணை நடாத்தியது போல, இந்திய தேசபிதா மகாத்மா காந்தியின் தலைமையில் இயங்கிய இந்திய தேசிய காங்கிரசும் ஒரு விசாரணைக்குழுவை நியமித்தது.

அந்தக்குழு, படுகொலையை நேரில் நின்று நடாத்தி முடித்த இராணுவத் தளபதி ஜெனரல் டயர் மட்டுமல்ல இவற்றுக்கெல்லாம் சூத்திரதாரியான பஞ்சாப் ஆளுநர் மைக்கல் ஓ டயரும் காரணமெனப் பிரகடனப் படுத்தியது.

## பழிவாங்கல்

இப்படுகொலை நடைபெற்ற போது கூட்டத்திற்கு வருகை தந்தவர்களுக்கு குடிதண்ணீர் வழங்கிக் கொண்டிருந்த 'உதயம் சிங்' என்ற சிறுவனும் கையில் காயமடைந்து நிலத்தில விழ்ந்தான். அவனுக்குமேல் அடுக்கடுக்காக விழ்ந்த மனித உடல்கள் அச்சிறுவனைச் சூழ கவசமாக வீழ்ந்து கிடந்தன அதனால் அச் சிறுவன் உயிர்பிழைத்தான்.

படுகொலை முடிந்து ஜெனரல் டயரினது படைகள் வெளியேறிய பின்னர், பிணங்களை விலக்கிக் கொண்டு அவன் எழுந்து பார்த்தான். மைதானம் முழுவதும் மனிதப் பிணங்கள் மலைபோலக் கிடந்தன.

இப்படுகொலை நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தவனை பழிவாங்குவதென, அன்றே அச்சிறுவன் சபதமெடுத்தான்.

இப்படுகொலையின் சூத்திரதாரியாக, அரசியற் போர்வைக்குள் நின்று செயற்பட்ட பஞ்சாப் ஆளுநர் மைக்கல் ஓ டயரையே உதயம் சிங் கருதினான்.

நேரடியாக நின்று படுகொலையைப் புரிந்த ஜெனரல் டயரை, ஒரு அம்பாகவே கருதனான்.



ஜெனரல் றெஜினோல்ட் எட்வேட் ஹரி டயர்

எனவே எய்தவன் இருக்க அம்பை நொந்து பயனில்லை என நினைத்து மைக்கல் ஓ டயரைக் கொன்று பழிதீர்க்க முடிவெடுத்தான்.

படுகொலை முடிந்தபின், அதற்காக ஜெனரல் டயருக்கு உடனடியாகப் பதவி உயர்வு வழங்க வேண்டுமென, பிரிட்டிஷ் அரசுக்கு ஆளுநர் மைக்கல் ஓ டயர் சிபார்சு செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் மைக்கல் ஓ டயரைத் தண்டிபபதற்கென சரியான தருணத்தை எதிர்பார்த்து உதயம் சிங் காத்துக்கிடந்தான்.

தனது சொந்த நாட்டில் வைத்துத் தண்டனை வழங்கச் சந்தர்ப்பம் கிடைக்காததால் கப்பலேறி ஆளுநரின் தேசமாகிய இங்கிலாந்து சென்றடைந்தான்.

( 11ஆம் பக்கம் பார்க்க )

உருவகம்

# அதிர்ச்சி நோய் எமக்கல்ல!

பெரிய பறவைகள் வானில் உயரப் பறந்து கொண்டிருந்தன. தரையில் இருக்கும் கண்களுக்குத் தம்மைச் சிறிதாக்கும் அளவு அவை உயரப் பறந்து கொண்டிருந்தன. பூ மரச் செடிகளின் நடுவே சிறியதேன் குருவிகளும் சிறகடித்து, இசை பரப்பிக் கொண்டிருந்தன.

இவை செல்லாத இடமெல்லாம் உயர்ந்தும் பதிந்தும் பறந்தும் வீழ்ந்தும் இன்னொன்று தத்தளித்துக் கொண்டிருந்தது. அது மனித உள்ளம்.

"ஏன் பதறுகிறாய்?"

"பயமாக இருக்கிறது"

"ஏன் பயம்?"

"குண்டுவிழப்போகுது...... ஆமி வரப் போறான்......

யோசிக்க யோசிக்கப் பயமாயிருக்கிறது".

"அதைப்பற்றி நீ யோசி... ஆனால் பயத்தோடு யோசியாதே"

"அப்போ......?"

ஒரு கண அமைதி' நிலவியது. தவித்துத் தத்தளித்த மனதுடன் அது பேசிக் கொண்டிருந்தது. அவ்விதம் அந்த மனித மனத்துடன் பேசிக்கொண்டிருந்தது அசரீரி.

"ஆமாம். பயமென்ற உணர்வைக் கலந்து யோசியாதே. உன் துணிவென்ற இயல்பு கலந்து யோசி. திடம்பெறுவாய்; தெளிவும் பெறுவாய்!"

அக் கண்ணுக்குப் படாத குரல் மேலும் பேசிக் கொண்டிருந்தது —

"துணிவு தெளிவைத் தரும். அதுவே அறிவைத் தரும்; ஒளியைத் தரும். அந்த ஒளி கொண்டு பார்; பாதை தெரியும்."

அந்தக் கலங்கிய உள்ளத்திற்கு கனவு கலைந்த—ஒரு விடிவு பிறந்த நிலை எழுந்தது. படபடப்புக் குறைந்தது.

"பயந்தபடி உன் கண்களைமூடாதே. அது இருளையே புகுத்தும்!. விழித்த கண்ணோடு பார். வருங்காலப் பார்வையை அது தரும். துணிவும் அறிவுமே உன் கண்கள். விளங்குகிறதா?"

"ஆமாம்" என இப்போது குரல் கொடுத்தது மனிதஉள்ளம்.

"அந்தத் துணிவோடு வருங்காலக்கடமையைப் பார். காத்திருக்கும் செயல்களைக் கணித்திடு. செய்ய இருப்பதைச் செய்... செய்!" என இரைந்தது குரல்.

உள்ளம் நிமிர்ந்து எழுந்தது. திடம் மிகு மனிதனாய் நின்றது!

அந்த மனிதன் கூறினான்—

"அதிர்ச்சி எனக்கில்லை.

துணிந்து எதிர்பார்த்து அதற்குத் தயார் செய்யும் மனிதனுக்கு அதிர்ச்சி என்றநோய் என்றுமே இல்லை!

அது அவனது பகைவனுக்கே!"

--நாகபத்மநாதன்

## புதிய வெளியீடுகள்




வானதி என்னும் போராளி ஒருவரால் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பாக "வானதியின் கவிதைகள்" என்னும் இந்த நூல் வெளிவந்துள்ளது

ஆனையிறவுச் சமரில் வீரச்சாவைச் சந்தித்துக்கொண்ட கப்டன் வானதி, தனது கவிதைகளால் மிழீழ மக்களுக்கு ஏற்கெனவே அறிமுகமானவர் தான் பல்வேறு வெளியீடுகளில் வெளியான இவரின் கவிதைகள் தொகுக்கப்பட்டு "வானதியின் கவிதைகள்" வெளிவந்துள்ளது

'வேங்கைகளின் வேந்தன்' எனும் கவிதையுடன் தொடங்கும் இக் கவிதைக் கொத்து, 'நாளைய சந்திக்கு நடந்ததைக் கூறு' என்று, நாங்கள் வாழ்ந்த - அவர்களின் உணர்வுகளை பகிர்ந்து கொண்ட - காட்டு மரங்களுக்கு வேண்டுகோள்விடும் கவிதையுடன் முடிவடைகிறது இதற்கு இடையில் மேலும் பதின்மூன்று கவிதைகள் வருகின்றன.

விடுதலைப் போராட்டம் நடக்கும் இந்தத் தேசத்தின் வரலாறு சந்தித்த துயரமான நாட்களையும், மகிழ்ச்சியான நாட்களையும் இவரின் கவிதைகள் தொட்டுச் செல்கின்றன.

இந்தச் சமூகத்தில் ஓர் பெண்ணாக வாழ்ந்து ஓர் போராளியாக மாறி நீண்ட காலம் வாழ்ந்த அவரது போராட்ட வாழ்வு அவருக்கு கொடுத்த பட்டறிவின் ஆழத்தில், அவரின் கவிதைகள் ஊற்றெடுக்கின்றன

பெண்ணடிமைத் தனத்திற்கும், பிற்போக்குத் தனத்திற்கும் எதிராக உறுதியாகக் குரல் எழுப்பும் இவர், அனைத்துக்கவிதைகளிலும் போராளிகளின் உணர்வுகளை வெகு அழகாகவும் - ஆழமாகவும் வெளிப்படுத்துகின்றார்.

விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினரால் இந்நூல் வெளியிடப்பட்டது.


மணலாறு விஜயன் (ந. விஜயரத்தினம்) என்பவரால் மணலாறு மாவட்டம் பற்றி எழுதப்பட்ட இந்நூல், மணலாறு மாவட்டத்தின் அறிமுகமாகவும் - விளக்கமாகவும் நிற்கின்றது.

மணலாறு மாவட்டம் எங்கு உள்ளது? அதன் நில அமைவு, பொருளாதார வளங்கள் எத்தகையன? அதன் பண்பாட்டுக் கோலங்கள் எப்படிப் பட்டது? என்பவற்றை ஆசிரியர் இந்நூலில் வெளிப்படுத்துகின்றார்.

இந்நூலின் ஆசிரியர் மணலாறு மாவட்டத்தில் உள்ள செம்மலை என்னும்கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதால், அந்தப் பகுதிகளின் இயற்கையையும் — வரலாற்றையும் காலத்திற்குக் காலம் மாறிவந்த அரசியற் சூழ்நிலைகளையும் அலசி ஆராய்ந்து வெளிப்படுத்தி உள்ளார்.

தமிழீழத்தைப் பொறுத்தவரை மணலாறு மாவட்டத்தின் புவியியல் — அரசியல் முக்கியத்துவம் எத்தகையது என்றும், சிங்களப் பேரினவாதம் மணலாறு மாவட்டத்தின் பெரும் பகுதியை எவ்விதம் விழுங்க முயல்கின்றது என்பதையும், இந்நூலில் ஆசிரியர் தெரிவிக்கின்றார்.

காலத்திற்குக் காலம்மணலாறுமாவட்டத்து மக்கள் சிங்களப் பேரினவாத அரசுகளால் எப்படிப் பாதிக்கப்பட்டார்கள் என்றும், அவர்களின் அரசியல் உணர்வலைகள் எவ்விதம் இருந்தன என்றும், ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் மணலாறு மாவட்டத்தில் ஏற்படுத்திய மாறுதல்களையும் இந்நூல், தமிழீழ மக்களுக்கு விளக்குகின்றது.






இந்நூல் இலங்கைத்தீவில் வாழும் சிங்கள-தமிழ் தேசிய இனங்களுக்கிடையில் நிலவிவரும் இன முரண்பாட்டிற்கான அடிப்படைகள் என்ன? அவை ஏன் தோற்றங்கொண்டன? என்னும் கேள்விகளுக்குப் பதில் தேட முனைகின்றது.

இதுவரை காலமும் பல வரலாற்று நூலாசிரியர்கள் பார்த்தது போலல்லாது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் புதிய கோணத்தில், புதிய பார்வைகளுடன் நோக்கப்பட்டுள்ளது

சிங்கள — தமிழ் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளின் அடிப்படைக் காரணிகளை, நூலாசிரியர் பல ஆதாரங்களைக் காட்டி நிருபிக்க முனைந்துள்ளார்.

இனப்பிரச்சினையின் அடிப்படைகளை எந்த ஒரு கோட்பாட்டுக்குள்ளும் உட்படுத்திப் பார்க்காது. பிரச்சினைகளைப் பிரச்சினைகளாகப் பார்த்திருக்கின்றார் இதன் காரணமாகவே புதிய புதிய காரணிகளைக் கண்டறிந்துள்ளார்.

இலங்கைத்தீவில் நிலவும் இனப்பிரச்சினை ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணியைக்கொண்டது. இப்பிரச்சினையானது இந்திய உபகண்டத்திற்குரிய புவிசார் — வரலாற்றுச் சூழலில் உருப்பெற்று, பல்வேறு பரிமாணங்களையும் பெற்று வளர்ந்தவொன்றாகும்.

எனவே, இதற்குரிய வரலாற்று நிலைமைகளையும் வரலாற்று வளர்ச்சிப் போக்குகளையும் புரிந்துகொள்வதன் மூலமே, இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையைப் புரிந்துகொள்ளல் சாத்தியமாகும்.

இந்த வகையில் கி. மு 1000 ஆம் ஆண்டுக்கும் முற்பட்ட இலங்கைத்தீவின் வரலாற்றை ஆராய்வதிலிருந்து, இற்றைவரையான இதற்குரிய இனப்பண்புப்பிரச்சினையை விளக்கும் ஒரு முயற்சியாகவும் இந்நூல் அமைந்திருக்கின்றது.

சுருக்கமாகச் சொன்னால் இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள் என்ற இந்நூல் எமது தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிக முக்கிய இடத்தை வகிக்கும் என்பது திண்ணம்.

# சிறீலங்காவின் இராணுவ

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தியைச் சீர்குலைப்பதுடன், அரசிற்குப் பாரிய பொருளாதார நெருக்கடிகளையும் தோற்றுவித்து இறுதியில் சிறீலங்கா அரசையே ஆட்டங்காணச் செய்யும் சாத்தியக் கூறுகளைக் கொண்டுள்ளது.

1984ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சிறீலங்கா அரசின் இராணுவச் செலவீனங்கள், அரசின் சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் கிடுகிடுவென உயர்ந்து சென்றதை அறிந்துகொள்ள முடியும். இந்தச் செலவீன அதிகரிப்பை சிறீலங்கா ஆட்சியாளர்கள் எப்படி ஈடுசெய்து வந்தார்கள் என்பதை, சகலரும் அறிந்து வைத்திருந்தார்கள்.

அதாவது, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கென வெளிநாடுகள் வழங்கிய நிதிஉதவிகளை தந்திரமாகத் திசைதிருப்பி, பாதுகாப்புச் செலவீனங்களை ஈடுசெய்வதை உணர்ந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

1991ஆம்ஆண்டு வெளிநாடுகளிடமிருந்து சிறீலங்கா அரசிற்குக் கிடைத்த நிதியுதவி 23,247 கோடி ருபாய்களாகும். அதே ஆண்டு சிறீலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனம் 16,700 கோடி ருபாய்களாகும்.

வருடாவருடம் அதிகரித்துவரும் வெளிநாட்டு உதவிகளை அனுசரித்து சிறீலங்கா அரசும் தனது பாதுகாப்புச் செலவீனங்களை அதிகரித்து வருவதை, அட்டவணை - 1 சுசகமாகக் காட்டுகின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி இந்தியப் படைகள் தமிழீழத்தை ஆக்கிரமித்து நின்ற 1987, 88, 89ஆம் ஆண்டுகளில் சிறீலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனங்களில் பெரும் பங்கை இந்திய அரசு தனது தலையில் கட்டிச் சுமந்ததை உலகம் அறியும். அதனால் அக்காலப்பகுதியில் சிறீலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனம் கணிசமான அளவு குறைந்திருந்தது.

1981ஆம் ஆண்டு பாதுகாப்புச் செலவீனமாக நாளொன்றிற்கு 30 இலட்சம் ருபாவைச் செலவு செய்து வந்த சிறீலங்கா அரசு, 1990ஆம் ஆண்டு நாலு கோடி ருபாவையும், 1991ஆம் ஆண்டு நாலு கோடியே ஐம்பதுலட்சம் ருபாவையும் நாளொன்றிற்குச் செலவு செய்துள்ளது

## சிங்கள இராணுவ இயந்திரம் சாதித்தது என்ன?

இத்தகைய பாரிய செலவுகளைச் செய்து உருவாக்கப்பட்ட இந்த இராணுவ இயந்திரத்தால் சிறீலங்கா அரசு சாதித்தது என்ன? பல்லாயிரம் தமிழீழ மக்களைப் படுகொலை செய்து, தமிழர் பொருளாதாரத்தைச் சிதைத்து, தமிழர்களது அமைதியான சுதந்திரமான வாழ்வைக் குலைத்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறெதும் செய்யவில்லை.

ஆனாலும் இந்த அடக்குமுறை இராணுவ இயந்திரத்தை படிப்படியாக அடித்து நொருக்குவதில் நாம் நம்பிக்கைக்குரிய வெற்றிகளைப் பெற்றுவருகின்றோம்.

பலகோடி ருபாய்களைச் செலவு செய்து சிறீலங்கா அரசு கொள்வனவு செய்யும் பல நவீன ஆயுத தளபாடங்களை, சிங்களப்படைகளிடமிருந்து கைப்பற்றி வருகின்றோம்.

அத்துடன், சிங்கள இராணுவ இயந்திரத்திற்கு இறுதி அடிகொடுக்கக்கூடிய வகையில், தமிழர் படைப் பலத்தைப் படிப்படியாக பெருக்கியும் வருகின்றோம்.

1986/1987ஆம் ஆண்டுகளில் சிறீலங்காவின் ஆயுதப் படையில 37,660 ஆயுதப் படைகள் இருக்க, 2000 புலிவீரர்கள் இருந்தார்கள். இது 18 இராணுவத்திற்கு 1 புலி என்ற விகிதமாகும். ஆனால் 1990/91 இல் சிறீலங்காவின் ஆயுதப் படையில் 1 00,000 போர்வீரர்கள் இருக்க எம்மில் 10,000 புலிவீரர்கள் இருக்கின்றார்கள்.

இது 10 இராணுவத்திற்கு ஒரு புலி என்ற விகிதமாகும்.

சிறீலங்கா அரசானது கடும் பிரயத்தனப்பட்டு தனது இராணுவ இயந்திரத்தைப்பலப்படுத்திக்கொள்ளும் அதேசமயம், தமிழீழ மக்களின் தேசிய பலம் ஒன்றுதிரட்டப்பட்டு, தியாகங்களின் மூலம் தமிழர் படை பலமும் கட்டிவளர்க்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. ✵

# 46 நாட்களில் —
# 160 படையினர் பலி.
# 146 ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டன.
## 46 புலி வீரர்கள் வீரச்சாவை அணைத்துக் கொண்டார்கள்.

எமது புதிய போருபாயத்தின் அடிப்படையில் கடந்த மூன்றரை மாதகாலமாக சிங்களப் படையணிகளை இடைவிடாது தாக்கிவருகின்றோம்.

அதில் இவ்வருடத் தொடக்கத்திலிருந்து இற்றைவரையான (ஜனவரி01 — பெப்ரவரி15) 46 நாட்களும் குறிப்பிடக் கூடிய நாட்களாகின்றன.

தமிழீழத்தின் எல்லா முனைகளிலும் சிங்களப்படைகள் எமது அதிரடித் தாக்குதலுக்கு உள்ளாகின. படையினரின் ரோந்து அணிகள், காவல் அரண்கள், போர்ப்படகுகள் மீது என கடலிலும், தரையிலும் இத்தாக்குதல்கள் தொடர்ந்தன.

இந்த 46 நாட்களிலும் 160இற்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து 146 ஆயுதங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன. பல்லாயிரக்கணக்கான ரவைகளும், வெடிப்பொருட்களும் எம்மால் கைப்பற்றப்பட்டன. இக் காலப் பகுதிக்குள் 46 புலி வீரர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்கள்.

இத் தாக்குதல்களினால் சிங்களப்படைக்கு ஏற்பட்ட பாரிய இழப்பானது அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி நிலைகுலையச் செய்துள்ளதுடன், சிங்கள அரசைக் குழப்பத்திலும் ஆழ்த்திவிட்டது.

## படுகொலையும் - பழிவாங்கலும்

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கே ஆளுநர் மைக்கல் ஓடயரைத் தேடி வருடக்கணக்காக அலைந்தான்.

சுமார் 20 வருடங்களின் பின்னர் அவனுக்கு அச் சந்தர்ப்பம் கிடைத்தது.

1940ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி லண்டனில் நடைபெறும் கூட்டமொன்றில கலந்து கொள்ள வரும் மைக்கல் ஓடயருக்கு அங்கு வைத்து தண்டனை வழங்க முடிவுசெய்தான்.

உதயம் சிங் எதிர்பார்த்தது போல ஜாலியன்வாலாபாக் படுகொலையின் சூத்திரதாரி மைக்கல் ஓ டயர் கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தான்.

தனது கைத்துப்பாக்கியை எடுத்த உதயம் சிங் 2000 இந்தியக் குடிமக்களின் படுகொலைக்குக் காரணமாகவிருந்த மைக்கல் ஓடயரை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்து தண்டனையை வழங்கினான்.

அவ் இந்தியத் தேசபக்தன் உடனடியாகவே பிரிட்டிஷ் பொலிசாரினால் பிடிக்கப்பட்டு, மரண தண்டனைக் குட்படுத்தப்பட்டான்.

ஆனாலும் 2000 இந்தியக் குடிமக்களின் இரத்தத்தால் தோய்க்கப்பட்ட ஜாலியன்வாலாபாக் மண், அத் துயரத்திற்குக் காரணமான ஆக்கிரமிப்பு ஆட்சியாளனைக் கொன்று, தனது தார்மீகக் கடமையை நிறைவேற்றியது.

உதயம் சிங் என்ற அந்த மாவீரன் - தேசபக்தன் இன்றும் மக்களின் மனதில் வாழ்கின்றான் ✵

# பாடசாலைகளும் தனியார்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் கல்வி நிலையங்களுக்கு வழங்கியுள்ளோம்.

தனியார் கல்வி நிறுவனங்கள் மீதான இவ்வரையறைகள் மாணவர்களது கல்வியைப் பாதிக்கப் போகின்றது என சிலர் ஆதங்கப்படுகின்றனர்.

இந்த ஆதங்கத்தில் எந்த வித உண்மையுமில்லை, பணத்தைக் கொடுத்து கல்வியைப்பெறுபவர்களுக்குத்தான், இந்த ஆதங்கம் இருக்கும். ஆனால் ஒட்டுமொத்த மாணவ சமூகத்திற்கு இது எந்தப்பாதிப்பையும் வழங்காது. மாறாக நன்மையையே கொடுக்கும்'

யாழ்மாவட்டத்தை எடுத்துக்கொள்வோம். இங்கே இரண்டு இலட்சத்து எழுபதாயிரம்(2.70,000) மாணவர்கள் பாடசாலையில் கல்வி பயில்கின்றனர், இவர்களில் சுமார் எண்பதினாயிரம் (80,000) மாணவர்கள் மட்டும்தான் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்கின்றனர்.

இது முழு யாழ். மாவட்ட மாணவர் தொகையில் ஏறக்குறைய 35 வீதமாகும். எனவே மிகுதி 65 வீத மாணவர்கள் பாடசாலைகளில் மட்டும்தான் கல்விபயில்கின்றனர்.

இப்பெரும்பான்மை மாணவர்கள், பணம்கொடுத்துப் படிக்கும் சிறுதொகை மாணவர்களுடன் கல்வியில் போட்டியிட முடியாது. இப்பாரபட்சம் நிறைந்த கல்விப் போட்டி சமூக அநீதியாகும்.

பணத்தைக் கொடுத்து கல்வியைப் பெறுவதை. முற்றாக நாங்கள் தடுக்கவில்லை. ஆனால் பணத்தை மையமாகக் கொண்ட அந்த முறை மூலம், ஒரு குறித்தமாணவர்கள் மற்றைய எல்லா மாணவர்களுடனும் போட்டியிடுவது ஆதரிக்கமுடியாதது.

எனவே எமது முடிவானது, ஒட்டுமொத்த மாணவ சமுதாயத்திற்கு நன்மையையே அளிக்கும்.

இத்துடன், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த சில ஆசிரியர்களும் அரச ஊழியர்களும் மேலான பணவருவாயை மட்டும் நோக்காகக் கொண்டு, தங்களது சொந்த மாவட்டங்களைவிட்டுக்குடாநாட்டுக்குள் வந்துசேருவது, அம்மாவட்டங்களின் கல்வியைப் பாதிக்கும். இது ஒரு சமூகப்பொறுப்புணர்வு அற்ற செயலாகும்.

எனவே, தனியார் கல்வி நிறுவனங்கள் மீதான எமது புதிய அணுகுமுறைமூலம், மற்றைய மாவட்ட மாணவர்களின் கல்வித்தரமும் கூடும்.

மனித சமூகம் விஞ்ஞானத்தை அடியொட்டிச் செல்கிறது. விஞ்ஞானம் என்பது அறிவின் வெளிப்பாடு. இந்த அறிவை வழங்குவது கல்வி.

எனவே, கல்வியை அபிவிருத்தி செய்து எமது சமூகத்தை வளர்ப்பதுதான் எமது நோக்கம்.

ஆனால், கல்வி ஒரு வியாபாரப் பொருளாக இருந்து பணம் உள்ளவன் கைக்குத்தான் அது சென்றடையலாம் என்ற கொள்கையை, நாம் ஆதரிக்கமாட்டோம்.

ஒரு தொகை மாணவர்களுக்கு இருக்கும் அதீத வாய்ப்புக்கள், இந்த நடைமுறையால் குறைவடையலாம் என்பது உண்மைதான்.

ஆனாலும் அது ஒரு குறைபாடாக இருக்கமுடியாது. அது சமூகநீதியாகவே இருக்கும்.

இன்று மாணவர்கள் பாடசாலைக்கும், தனியார் கல்வி நிலையங்களுக்குமென மாறி மாறி, ஆலாய்ப்பறக்கின்றார்கள். இப்படி இயங்கியாவது அவர்கள் ஏதாவது நன்மை பெறுகின்றார்களா என்றால் அதுவுமில்லை

ஒரு குறித்த பாதைவழியே ஒரு குறித்த தொகையினர் தான் போகமுடியும். என்னதான் முயற்சிசெய்தாலும் அத்தொகைக்குமேல் போக முடியாது இதுதான் சிங்கள அரசின் இனவிரோதக் கல்விக் கொள்கை

எமது மாணவர்கள் என்ன செய்கின்றார்கள் என்றால், தமிழர்விரோத கல்விக் கொள்கையைப் பற்றி அக்கறைப்படாது, அக்குறித்த தொகைக்குள் தாம் இடம் பிடித்து விடவேண்டும் எனத் துடியாய்த் துடிக்கின்றனர்.

இறுதியில்ஏற்கெனவேமுடிவு செய்யப்பட்டபடி ஒரு குறித்த தொகையினர் மேற்படிப்புவாய்ப்பைப்பெற,தமது பணத்தையும் நேரத்தையும் செலவழித்த மிகுதிப்பேர் "தலைவிதி" எனத்தம்மைத் தாமே நொந்தபடி, வேதனையைச் சுமக்கத் தொடங்குகின்றனர்.

மாணவர்களது இறுதி அத்தியாயம் இப்படியிருக்க, அவர்கள் தமது மாணவப்பருவத்தில் ஒரு இயந்திரவாழ்க்கை வாழவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.

பெரும்பாலும் விடிய முன்னர் வீட்டைவிட்டுப் புறப்பட்டு, இருண்டபின்னர் வீடு வந்து சேர்கின்றார்கள். இதனால் குடும்ப இயக்கத்தில் அவர்களுக்கு அக்கறையில்லாது போகின்றது சூழல் நடப்புக்களைப் புரியாது வாழ்கின்றனர் உழைப்பின் பெறுமதி தெரியாது செலவு செய்கின்றனர்.

அத்துடன் இயந்திர இயக்கம் காரணமாக அவர்களது உடல் - உள நலன்களும் பாதிக்கப்படுகின்றன. இவை ஒரு ஆரோக்கியமான இளம் சந்ததிக்கு உகந்ததல்ல.

எனவே, மாணவர்கள் குடும்ப இயக்கத்தில் பங்குபெறவும் சூழல் நடப்புகளைத் தெரிந்து சமூக யதார்த்த அறிவைப் பெறவும், உடல் - உள நலன்களை விருத்தி செய்யவும் அவர்களுக்கு நேரம் தேவை.

மண் தன் வளத்தை இழக்காது பாதுகாப்பதற்கு மாற்றுப்பயிர் செய்யப்பட வேண்டுமென, விஞ்ஞானம் கூறுகின்றது.

அதேபோன்று மாணவர்களும் தங்களுடைய ஆளுமையை. ஆற்றலை வளர்ப்பதற்கு, பல்துறைகளில் தங்களுடைய நேரத்தில் ஒரு பகுதியைச் செலவிட வேண்டும்.

படிப்பு. இசை, விளையாட்டு நாடகம்போன்ற இன்னோரன்ன அம்சங்களுடன் ஓய்வும் வேண்டும். இவைகள் ஒரு இளமனதைச் செழுமைப்படுத்தி, ஆரோக்கியமுள்ள ஒரு சமூகமனிதனாக அவனை வளர்க்கும்.

தனியார் கல்வி நிறுவனங்கள தொடர்பான எமது புதிய அணுகுமுறை மூலம், மேற்குறித்த அனைத்து வாய்ப்புகளையும் வசதிகளையும், இளம்பரம்பரைக்கு நாங்கள் ஏற்படுத்திக்கொடுக்கின்றோம்.

அத்துடன் பொறுப்புமிகுந்த சமூகப்பாத்திரத்தை வகிக்கும் பாடசாலைக் கல்வி மீண்டும் அபிவிருத்தி செய்யப்படும். பெற்றோர்களை/மக்களை மீண்டும் பாடசாலை மீது அக்கறைகொள்ள வைக்கும். தமது சந்ததியின் சொத்தாக அவற்றை மதித்து அவற்றை அபிவிருத்தி செய்ய வைக்கும்.

மாணவர்களும் ஒரு கட்டுக் கோப்புக்குள் - சமத்துவம் சகோதரத்துவம் என்ற மானிடப்பண்புகள் நிறைந்த - சமூகப் பொறுப்புமிக்க புரட்சிகர இளம் சந்ததியாக வளர வாய்ப்பளிக்கும். ✵

# உளவாளிகள்:

## எப்படி உருவாகின்றார்கள் — உருவாக்கப்படுகின்றார்கள்?

**பல்வேறு காரணங்களுக்காகவும் கொழும்பு செல்பவர்களிற் சிலர் உறவுமுறைக்காகவும், பணத்துக்காகவும், பழைய தொடர்புகள் காரணமாகவும், வியாபாரம் காரணமாகவும், சிங்கள அரசின் உளவாளிகளாகமாறி தேசத்துரோகம் புரிகின்றனர். இவ்விதமானவர்களில் நால்வரின் பெயர் விபரங்களை உதாரணத்திற்காக வெளியிட்டு, அவர்கள் எப்படி உளவாளிகளாக மாறியிருக்கின்றார்கள் என, விளக்கியுள்ளோம். சிங்கள அரசு வைக்கும் பொறிகளில் சிக்கி தேசத்துரோகம் புரிந்துவிடக் கூடாது என்பதற்காகவே, இவற்றை மக்கள் முன் வைக்கின்றோம்.**

தமிழீழ விடுதலைப் போராட்டம் சந்தித்த மிகப்பெரும் சவால்களுள் ஒன்று துரோகம். இது, ஒரு விடுதலைப் போராட்டத்தை நடாத்தும் மக்களுக்கு மிகமிக ஆபத்தானது. எதிரியினது மாபெரும் சேனைகளால் செய்ய முடியாததை, ஒரு துரோகி சில வேளைகளில் செய்துவிடுவான்.

இங்கே நாங்கள் துரோகிகள் என அழைப்பது இந்த மண்ணின் குடிமக்களாகவே இருந்தபடி, எதிரிக்குச் செயற்பாட்டுரீதியில் துணைபோகின்றவர்களை—செயற்பாடுமூலம் போராளிகளுக்கு, மக்களுக்குத் தீங்கு விளைவிப்பவர்களையே யாகும்.

எமது மக்களின் விடுதலைக்காக அளப்பரிய தியாகங்கள் புரிந்து, தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்து, ஒரு தேசியத் தலைமையின்கீழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கும் வேளையில், இந்த மண்ணின் பிரசைகளுள் யாராவது ஒருவர் போராட்டத்திற்குத் துரோகமிழைப்பதை எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாது.

சாதாரணமாக, உலக விடுதலைப் போராட்டங்கள் எல்லாமுமே துரோகங்களைத் தாண்டித்தான், அவற்றை முறியடித்தபடி எதிர் நீச்சல் போட்டுத்தான், வெற்றிபெற்றிருக்கின்றன.

எமது விடுதலைப் போராட்டமும் அந்தப்பொது நியதிக்கு விதிவிலக்கானதல்ல இதுவரைகாலமும் எமதும் - எமது மக்களினதும் விழிப்புணர்வினால், துரோகங்களால்மிகப் பெரிய பின்னடைவுகள் வராது தடுத்து வந்துள்ளோம். ஆனாலும் விலைமதிக்க முடியாத எமது போராளிகளின் உயிரை, போராட்டப் பங்காளர்களது உயிரைத், துரோகம் கவர்ந்துசென்றதை எமது வரலாறு சொல்லும்.

இந்திய - தமிழீழப் போர் நடைபெற்றபோது, அசிங்கமான - இரத்தக்கறை படிந்த ஒருதுரோக அத்தியாயத்தைத் தமிழீழ வரலாறு கண்டது.

அதற்குக்காரணமானதுரோகிகளை மக்களின் துணையுடன் ஒடுக்கியதால், இன்று வடதமிழீழ மக்கள் நிம்மதியுடனும் மானத்துடனும் வாழ்கின்றார்கள். ஆனாலும் அதன் எச்சசொச்சங்கள் இன்றும் எமது மண்ணில்மறைவாகவும், எதிரிகளுடனும் உலாவருகின்றன.

இன்று துரோகப் புயலின் செயற்பாட்டு மையம் கொழும்பில் நிலைகொண்டுள்ளது. சிங்கள அரசுஇயந்திரத்துடன் சேர்ந்து இம் மண்ணின் சாபக்கேடுகளான இத்துரோகக் கும்பல்கள் செயற்பட்டு வருவது, எல்லோரும் அறிந்ததே.

தென் தமிழீழத்தின் பல பகுதிகள் இன்றும்கூட, இத் துரோகக்கும்பல்களுக்கு உயிர் விலை கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

ஆனால் வடதமிழீழத்தில் நிலைமை வேறுவிதமாக இருக்கின்றது.

வடதமிழீழத்தின் பெரும் பகுதி புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதால், இராணுவ நடமாட்டம் இல்லை. ஆகவே, துரோகிகள் செயற்பட முடியாதுள்ளனர்.

எனவே இப்பகுதியிலுள்ள புலிகளின் முகாம்களையும், புலிகளின் செயற்பாடுகள் - நடமாட்டங்களையும், போராட்ட நடவடிக்கைகளையும் சரியாக அறிய எதிரிக்கு வாய்ப்பில்லை.

### தமிழ் உளவாளிகள்

இந்த நிலையில் எதிரியானவன், துரோகக் கும்பல்களையும் வைத்து அவர்களது செயற்பாட்டையும் பெற்றுக்கொள்ளும் அதேசமயம், தனது சொந்தக் கட்டுப்பாட்டில் தமிழ் உளவாளிகளையும் உருவாக்கிவைத்திருக்கின்றான்.

இந்த உளவாளிகளிற் சிலர் சிறீலங்காவின் உளவு நிறுவனத்தின் முகவர்களாகவும், சிலர் கூட்டுப்படைத்தலைமையகத்தின் முகவர்களாகவும் செயற்படுகின்றார்கள். இவர்களிடமிருந்து வேண்டிய தகவல்களை பெற்றுக்கொள்கின்றார்கள். அத்துடன், பெற்ற தகவல்களை உறுதிப்படுத்தியும் கொள்கின்றார்கள்.

புலிகளின் போராட்டச் செயற்பாடுகள், அவர்களது முகாம்கள், நடமாட்டங்கள் வடதமிழீழத்தைப் பொறுத்தவரை இரகசியமானதல்ல, அவை மக்கள் அரங்கிலேயே நடைபெறுகின்றன

எனவே மக்கள் திரளிலிருந்து யாரோ ஒரு கோடரிக்காம்புமூலம் தகவல்களைப் பெறுவதையே, எதிரி வழமையாக்கிக் கொண்டிருக்கின்றான்.

இத்தகைய கோடரிக்காம்புகளை, பொதுமக்கள் பயன்படுத்தும் வவுனியாப்பாதையூடே, எதிரியும் உள்வாங்குகின்றான்.

இன்று, ஏதோ ஒருகாரணத்திற்காக அது வெளிநாடுகளிலுள்ள உறவினர்களுடன் தொலைபேசியில் கதைப்பதற்கோ, அல்லது வெளிநாடு செல்வதற்கோ, அல்லது வியாபாரம் செய்வதற்கோ அல்லது உறவினர்களைப் பார்த்து வரவென்றோ, தினமும் ஏராளமான தமிழீழ மக்கள், வவுனியாப் பாதையூடாக கொழும்புசென்றடைகின்றார்கள். அங்கே சென்று விடுதிகளில் தங்குகின்றார்கள். அதே வேளை சிறீலங்கா அரசின் நேரடி உளவாளி ஒருவர் (அவர் தமிழராகவே இருப்பார்), ஏதாவது ஒரு வகையில் விடுதிகளில் இருப்போரிடம் சிநேகம் கொள்வார் சிலவேளைகளில் அந்த உளவாளி புலிகளை ஆதரித்துக் கதைத்தபடியே தனது வேலையைத் தொடங்குவார்; சிலவேளைகளில் புலிகளை விமர்சித்தபடி வேலையைத் தொடங்குவார். அவர் எப்படித் தனது வேலையைச் செய்வார் என்பது, அவர் சந்திக்கும் ஆட்களது மனநிலைகளைப் பொறுத்திருக்கும்.

### உளவாளிகள் எப்படி உருவாகின்றார்கள் ?

திடீரென ஒருநாள் அந்த விடுதி சிங்களக் காவல்துறையினரால் சுற்றி வளைக்கப்படும். தமிழர்கள் கைதுசெய்யப்படுவர்; அதற்குள் உளவாளி கண்வைத்த நபரும் சிக்குவார். இரண்டொரு நாளில் குறித்த நபர் அந்த உளவாளியால் '' கஷ்டப்பட்டு '' விடுவிக்கப்படுவார். அத்துடன், உதவி என்ற பெயரில் செலவுக்காக குறித்த தொகை பணமும் வழங்கப்படும். இத்துடன் குறித்த நபர் உளவாளியுடன் நெருங்கிக்கொள்வார்.

தகவல் சேகரிப்பு வேலை இரகசியமாகவும் சாதுரியமாகவும் தொடங்கும். மேன் மேலும் பணம் தள்ளப்படும். குறித்த நபர் இடைக்கிடை யாழ்ப்பாணம் வந்து கொழும்பு செல்வார். அவருடன் தகவல்களும் வரைபடங்களும் செல்லும்.

இதேபோன்று விடுதிகளிலுள்ள சிலரது பணம் திடீரென, யாரோ ஒருவரால் களவாடப்படும், அல்லது வழிப்பறி செய்யப்படும். அவருக்கும் உதவி சென்றடையும். அவரும் சிலவேளைகளில் தகவல் கொடுப்பவராக மாறி விடுவார்.

இவ்விதமான உளவாளிகளுக்கு உதாரணமாக திருநகர் - கிளிநொச்சியைச் சேர்ந்த - 41 வயதுடைய—மனுவேல் மரியகென்ராட் என்ற நபரை எடுக்கலாம். வெளிநாட்டில் இருக்கும் இவரது சகோதரி அனுப்பிய பணத்தை எடுக்க கொழும்பு சென்று, அங்கு ஒரு விடுதியில் தங்கிநின்றபோது, இவர் அரச உளவாளி ஒருவனால் உளவாளியாக மாற்றப்பட்டார். இவர் இரண்டு முறை கொழும்பு சென்று தகவல்களை வழங்கியுள்ளார். இதற்குப் பிரதி உபகாரமாகப் பணமும் பெற்றுள்ளார்.

உதவி என்ற போர்வையில் பணம் பரிமாறப்பட்டு, இப்படியான முறைகளிலும் ஒரு உளவாளி உருவாக்கப்படுவான்.

வடதமிழீழ மக்கள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளினால், சிங்கள அரசு தான் எதிர்பார்த்தபடி ஏதாவது அரசியல் இராணுவ நோக்கங்களை நிறைவேற்றியதோ இல்லையோ, சில உளவாளிகளை உருவாக்கி பெறுமதிமிக்க தகவல்களைப் பெற்றுள்ளது. இத்தகைய உளவு நடவடிக்கையை கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகமே நேரடியாகக் கையாண்டது.

வட தமிழீழத்திற்கு மண்ணெண்ணெய் எடுத்துச்செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள இராணுவக் கூட்டுப்படைத் தலைமையகமே வழங்கிவந்ததை, மக்கள் அறிய வாய்ப்புக்கள் குறைவு.

அந்த அனுமதிப்பத்திரமுறை வட தமிழீழ மக்களுக்கு மண்ணெண்ணெய் அனுப்ப வேண்டும் என்ற நோக்கில் செய்யப்பட்டதில்லை; அது ஒரு தூண்டிலாகவே பயன்படுத்தப்பட்டது. யாரோ சிலர், இலவச அனுமதிப் பத்திரத்திற்காக, தங்குதடையற்ற வியாபாரத்திற்காக, இலட்சக்கணக்கான ரூபா வருமானத்திற்காகத் தகவல் கொடுப்பவர்களாக மாறினர். இவ்விதமான உளவாளிகளுக்கு உதாரணமாக, கம்பர்மலை-வல்வெட்டித் துறையைச் சேர்ந்த — 54 வயதுடைய -இராமலிங்கம் மகேஸ்வரன் (மகேந்திரன்) என்ற நபரை எடுக்கலாம். இவர் அரச உளவாளி ஒருவனால் உளவாளியாக மாற்றப்பட்டவர். இருமுறை கொழும்பு சென்று தகவல்களை வழங்கியுள்ளார், அதற்காகப் பணமும் பெற்றார். இவர் எமது இயக்கத்துடன் ஒன்றியிருந்து ஒரு தேசப்பற்றாளன் போல் நடித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது,

உறவினர்களைச் சந்திக்க கொழும்புசென்று உளவாளிகளாக மாறும் ஒரு வகையினர் உண்டு. துரோகக்கும்பல்கள் ஒன்றில் அங்கம் வகிக்கும் உறவுமுறையான ஒருவரை கொழும்பில் சந்தித்து, உறவுமுறைக்காகவோ சுயநலனுக்காகவோ தகவல்களை வழங்கி, நிரந்தர உளவாளிகளாக மாறும் தன்மைகளும் உண்டு. இதற்கு உதாரணமாக பன்னங்கண்டி-வட்டக்கச்சியைச் சேர்ந்த-42 வயதுடைய- அந்தோனி பிரகாசம் என்பவரை எடுக்கலாம். இவரது ஒன்றுவிட்ட அண்ணன் முறையான ஒருவரின் மனைவியினது தம்பி, சிறீலங்கா இராணுவத்தில் ஒரு சிப்பாயாக இருக்கின்றார்.

இவரது தொடர்புகளால், பிரகாசம் ஒரு முக்கிய முகவராக மாறினார். கொழும்பிலிருந்து விற்பனைப் பொருட்களைச் சுலபமாகக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு உதவியாக, இராணுவம் இவருக்கு அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்கியிருந்தது. அதன் உதவியுடன் இவர் பொருட்களைக் கொண்டுவந்து சேர்த்தார். பிரதியுபகாரமாக வன்னி மாவட்டத்திலுள்ள பத்திற்கும் மேற்பட்ட முகாம்களது விபரங்களையும் வரைபடக் குறிப்புக்களையும் இவர் இராணுவத்துக்கு வழங்கியுள்ளார்.

இவரது வரைபடக் குறிப்புகளின் உதவியுடன் எமது முகாம்கள் குண்டுவீச்சுக்கு இலக்காகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உத்தியோகம் காரணமாக இருந்த பழைய தொடர்புகளை மீண்டும் கொழும்பில் புதுப்பித்துக் கொள்ள நேரும்போதும், ஒரு உளவாளி உருவாக்கப்படுகின்றான்,

கணேசபுரம் - கிளிநொச்சியைச் சேர்ந்த - ?? வயதுடைய - முருகேசு தர்மராஜன், இந்தவகையினருக்கு ஒரு உதாரணமாவார்.

இவர் 1966 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் சிறீலங்கா இராணுவத்தில் கடமையாற்றியுள்ளார். பின்னர் இராணுவத்தைவிட்டு விலகி இ. போ. ச நடத்துனராக இருந்தார்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

**பணத்துக்காகவோ, சுயநலனுக்காகவோ சிலர் செய்யும் துரோகம் எமது போராட்டத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. எண்ணற்ற மக்களின் சாவுக்கும் - துன்பத்திற்கும் இது காரணமாகியுள்ளது. விலைமதிக்க முடியாத எமது போராளிகளின் உயிரை, போராட்டப்பங்காளர்களின் உயிரைத் துரோகம் கவர்ந்து சென்றதை எமது வரலாறு சொல்லும். இந்த மண்ணின் பிரசைகள் யாராவது ஒருவர் போராட்டத்திற்குத் துரோகமிழைப்பதை எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாது.**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**